# செம்மணி

நிலம் 3 துகள் 105 வள்ளுவர் ஆண்டு 2052, 23 - 29 ஆடி 2022 வாரமலர் பக்கங்கள் 27



## பலவந்தமான வன்முறைத் தாக்குதலுக்குப் பின்னர்
# மீண்டு எழுந்தது கோட்டா கோ கம

இலங்கையின் புதிய அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டதை அடுத்து நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு முப்படைகளுக்கும் காவல்துறைக்கும் அவ ரால் வழங்கப்பட்ட நிலையில் பக்கம் 03

## அதிகாரபீடத்தில் உறுதியாக மீளஅமர்ந்த ராஜபக்ச அணி

### டினேஸ் குணவர்த்தன தலைமை அமைச்சராகப் பதவியேற்பு



ராஜபக்சக்களின் கட்சியான பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் வழங்கிய பேரா தரவுடன் ரணில் விக்கிர மசிங்க அரச தலைவராகப் பதவியேற்றுக்கொண்ட நிலையில் பெரமுனவின் மூத்த தலைவர்களில் ஒரு வரும் ராஜபக்சக்களின் நெருங்கிய சகாவுமா கிய டினேஸ் குண வர்த்தன தலைமை அமைச்சராக நேற் றுப் பதவியேற்றார். முன் பக்கம் 02

## யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்

காலி முகத் திடல் போராட்டக்காரர்கள் மீது படையினரால் நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று பகல் போராட்டம் நடத்தப்பட வுள்ளது.
ஜேவிபி கட்சியின் ஏற்பாட்டில் நடக்கும் இந்தப் போராட் டத்தில் கலந்துகொள்ள அனைவ பக்கம் 27

## புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்பு

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் புதிதாக 18 அமைச்சர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர். தலைமை அமைச்சராக டினேஸ் குணவர்த்தன உட்பட ஒரு தொகுதி அமைச்சர்கள் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அமைச்சரவை எதிர்வரும் நாட்களில் விரிவாக்கம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
புதிய அமைச்சரவையில் நீண்ட காலத்திற்குப் பின்னர் முஸ்லிம் ஒருவர் அயலுறவுத்துறை பக்கம் 03

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# நிலையற்ற எதிர்காலம்

மக்களின் கடும் போராட்டங்களுக்குப் பிறகு ஒருவழியாக கோட்டாபய ராஜபக்ச நாட்டைவிட்டுத் தப்பியோடியது டன் அரச தலைவர் பதவியிலிருந்தும் அவர் வெளியேறினார். ஆனால் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அரச தலைவராகத் தெரிந்தெடுக் கப்பட்டுள்ளார்.

மக்களாட்சித் தத்துவத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டவராக ரணில் விக்கிர மசிங்க அரச தலைவரானமை சரிதான். எனினும் மக் களாட்சி அறத்தின்படி அவரது தெரிவு முற்றிலும் தவறானது, மக்கள் தீர்ப்புக்கு எதிரானது.

2020 பொதுத் தேர்தலிலேயே ரணில் விக்கிரமசிங்கவை முற்றிலுமாக நிராகரித்தவர்கள் இலங்கை மக்கள். அதைத் தொடர்ந்து பின்கதவால் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குள் வந்தவர் அவர். அவரை நிராக ரித்தே கோட்டாபயவையும் மகிந்தவையும் அரியணை ஏற்றினார்கள். அவர்களாலும் திறம்பட நிர்வாகத்தைக் கொண்டு நடத்த முடியவில்லை என்கிறபோது அவர்க ளையும் தூக்கி எறிந்தார்கள்.

அதன் பொருள் ரணிலை மீண்டும் பதவிக்குக் கொண்டு வருவதென்பதல்ல என்பது வெளிப்படை. அப்படியிருந்த போதும் ரணில் அரசியல் தந்திரங்கள், பேரங்கள் மூலம் அரச தலைவர் பதவியைக் கைப்பற்றியிருக்கிறார்.

பதவியேற்ற கையோடு கோட்டா கோ கம போராட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்தி அந்தப் போராட்டத்தையும் தனக்கெதிரானதாக வீரியமூட்டியிருக்கிறார் ரணில். வெள்ளிக்கிழமை மாலை முதல் போராட்டம் மீண்டும் வீரியம் பெற்றிருக்கிறது. இனி அது தொடரும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி தொடர்ந்துவரும் நிலையில் ரணிலுக்கு எதிரான போராட்டங்கள் உடனடியாக ஓயப்போவதில்லை என்பது தெளிவு. ரணில் மேற்குலக நாடுகளுக்கு வேண்டப்பட்டவர் என்கிற நிலையில் அவரது ஆட்சியை தக்க வைப்பதில் அவை அதிக கவனம் செலுத்தும் என்பதை எதிர்பார்க்கலாம். அதே நேரம் போராட்டக்காரர்கள் ரணிலைப் பதவி விலக வேண்டும் என்றும் எதிர்க்கப்போகிறார்கள்.

ராஜபக்சக்களைப் பதவியிலிருந்து அகற்றியது நாட்டைப் புதிய செல் நெறியில் அழைத்துச் செல்லக்கூடிய தலைவர்களை அதிகாரத்திற்குக் கொண்டுவருவதற்காகவே தவிர, தோல்வியுற்ற ரணிலை அரச தலைவராக்குவதற்கல்ல.

இந்த நிலையில் ரணிலை அகற்றுவதற்கான போராட் டங்கள் தொடரும் நிலையில் நாடு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பப்போவதில்லை. அது பொருளாதாரத்தின் மீது இன்னும் தாக்கத்தைச் செலுத்தக்கூடும். அது நாட்டிற்குப் பேரவலமாக வந்து முடியும்.

நாட்டின் அத்தகைய நிலையற்ற எதிர்காலத்தை நாட் டின் நன்மை கருதி தனது பதவியிலிருந்து ரணில் விக்கி ரமசிங்க விலகி புதிய இலங்கைக்கு வழிவிடவேண்டும்.



## அதிகாரபீடத்தில்...

னதாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் கட்சியைச் சேர்ந்த ஒருவரே தலைமை அமைச்சராவதைத் தான் விரும்புகிறார் என்று அரச தலைவராகப் பதவியேற் றுக்கொண்ட பின்னர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந் தார். அதற்கேற்ப நாடாளு மன்றத்தில் அதிக ஆசனங் களைக் கொண்டிருக்கும் பொது ஜன பெரமுன கட்சி யைச் சேர்ந்தவரான டினேஸ் குணவர்த்தனவை தலைமை அமைச்சராக ரணில் நிமித் தார்.

கொழும்பு, பிளவர் வீதியில் உள்ள தலைமை அமைச்சர் அலுவலகத்தில் அரச தலை வர் ரணில் முன்பாக டினேஸ் குணவர்த்தன பதவியேற்றுக் கொண்டார். மகாஜன எக்சத் பெரமுன என்கிற இடதுசாரிக் கொள்கைகளையுடைய கட்சியின் தலைவரான அவர், நீண்ட காலமாகவே ராஜபக்சக்களுடன் இணை ந்து அரசியலில் ஈடுபட்டு வருபவர். அவர்களுக்கு நெருங்கிய நண்பர்.

ராஜபக்சக்களின் ஆட்சியில் அயலுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பல முக்கிய அமைச்சுப் பதவிகள் அவ ருக்கு வழங்கப்பட்டிருக்கின் றன. நீண்ட காலமாக நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் டினேஸ் குணவர்த் தன ஐக்கிய தேசியக் கட்சி யின் முதலாளித்துவக் கொள்கைக்கு முற்றிலும் எதிரானவராகவே கடந்த காலங்களில் தன்னை வெளிப் படுத்தி வந்திருக்கிறார்.

இப்போது அவர்கள் இருவ ரும் ஒரே அணியில் ராஜ பக்சக்களின் கட்சி உறுப்பி னர்களின் ஆதரவுடன் இலங்கையின் முக்கிய இரு பதவிகளிலும் அமர்ந்துள்ள னர்.

2019ஆம் ஆண்டு நடை பெற்ற அரச தலைவர் தேர் தல் மூலமும் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தல் மூலமும் ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடி, டொலர் பற்றாக்குறை, கடன்களை மீளச் செலுத்தமுடியாத வங்குரோத்து நிலை என்பன காரணமாக ராஜபக்சக்கள் மீது கோபம்கொண்ட மக்கள் போராட்டங்கள் மூலம் அவர் களை அதிகாரத்திலிருந்து விரட்டியடித்தனர்.

பதவியிலிருந்து விலகிச் சென்றபோதும் தமது கட் சியைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரம சிங்கவை முதலில் தலைமை அமைச்சராகவும் பின்னர் அரச தலைவராகவும் பதவி யில் அமர்த்தினார்கள் ராஜ பக்சக்கள்.

அரச தலைவராக இருந்த கோட்டாபய ராஜபக்ச மக் கள் போராட்டங்களுக்குப் பயந்து நாட்டைவிட்டுத் தப்பியோடிய பின்னர் நாட் டில் அனைத்துக் கட்சிகளை யும் உள்ளடக்கிய புதிய ஆட்சி ஒன்றும் புதிய அரசி யல் கலாசாரமும் உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நாடாளுமன்றத் தில் தமது கட்சிக்கிருக்கும் பலத்தின் மூலம் தலைமை அமைச்சர் பதவியிலும் தமது நெருங்கிய சகாவை அமர்த் தியிருக்கிறார்கள் ராஜபக் சக்கள்.

இதன் மூலம் மறைமுகமாகத் தமது கட்டுப்பாட்டின் கீழேயே ஆட்சி அதிகாரத்தை ராஜ பக்சக்கள் கொண்டிருக்கி றார்கள் என்பதுடன் அதி காரபீடத்தில் மீண்டும் ராஜ பக்சக்களே உறுதியாக இடம் பிடித்திருக்கிறார்கள் என்கி றார்கள் அரசியல் அவதா னிகள்.

## பலவந்தமான...

வெள்ளிக்கிழமை அதிகாலையில் கும்மிருட்டில் அடித்து விரட்டியும் துவம்சம் செய்தும் அகற்றப்பட்ட கோட்டா கோ கம போராட்டம் பிற்பகலுக்குப் பின்னர் மீண்டும் அதேயிடத்தில் எழுச்சிபெற்றது.
அரச தலைவர் மாளிகைக்கு முன்பாக காலி முகத் திடலுக்கு எதிர்ப்புறமாக அமைக்கப்பட்டிருந்த கோட்டா கோ கம கூடாரங்கள் அதிகாலை 2 மணியளவில் காவல்துறை மற்றும் படையினரால் பிடுங்கி எறியப்பட்டன. அத்துடன் போராட்டக்காரர்களும் அங்கிருந்து அடித்து விரட்டப்பட்டனர்.
அதிகாலையில் அசந்து தூங்கிக் கொண்டிருந்த போராட்டக்காரர்கள் மீது காவல்துறையினரும் படையினரும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தினர் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்திருந்தனர். இந்தத் தாக்குதல் தமிழர்கள் மீது சிங்களப் படையினர் நடத்திய தாக்குதல்கள் குறித்த கழிவிரக்கத்தை சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்தவும் வழி வகுத்துள்ளது.
படையினரின் மனிதாபிமானமற்ற வன்முறைத் தாக்குதலால் பாதிக்கபட்ட சிங்களப் பெண் ஒருவர் சமூக ஊடகத்தில் வெளியிட்டிருந்த பதிவில் கொழும்பில், சமூக ஊடங்களின் பெரும் வெளிச்சத்துக்கு மத்தியிலேயே எங்கள் மீது இவ்வளவு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் தமிழர்களுக்கு எதிராக எப்படிச் செயற்பட்டிருப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிவதாகப் பதிவிட்டிருக்கிறார். தமிழர்களிடம் மன்னிப்பும் கேட்டிருக்கிறார் அவர்.
முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவைப் பதவி விலகக்கேட்டு ஆடி (ஜூலை) 9ஆம் நாள் நடந்த பெரும் போராட்டத்தின்போது அரச தலைவர் மாளிகை மற்றும் செயலகத்தைக் கைப்பற்றியிருந்தார்கள் போராட்டக்காரர்கள் அங்கிருந்து வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு தாம் வெளியேறுவார்கள் என்று அறிவித்திருந்தனர். இதனால் தம் மீது தாக்குதல் நடத்தப்படும் என்கிற எதிர்பார்ப்பு எதுவும் இன்றி போராட்டக்காரர்கள் அந்த நேரத்தில் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தனர்.
அதிகாலை 2 மணி கும்மிருட்டில் வந்த காவல்துறை மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் போராட்டக்களத்திலிருந்தவர்களை அடித்தும் விரட்டியும் பலவந்தமாகவும் வெளிறற்றினார்கள். கடற்படை, தரைப் படை, வான் படையைச் சேர்ந்தவர்கள் போராட்டக்காரர்களின் கூடாரங்களை அடித்து நொருக்கியதுடன் அவற்றை அப்புறப்படுத்தினர்.
போராட்டக்காரர்கள் தாக்கப்படுவதைக் கேள்விப்பட்டு ஏனைய மக்கள் அந்த இடத்தில் கூடுவதைத் தடுப்பதற்காக போராட்டக்களத்தைச் சுற்றிய பகுதிகளில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. காயப்பட்டவர்களை ஏற்றிச் செல்வதற்கான அம்புலன்ஸ் உள்ளே செல்வதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை.
படையினர் தாக்கியதில் 9 பேர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர் என்று காவல்துறையினர் தெரிவித்தனர். மேலும் 9 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.
போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியானதும் பல தரப்புகளில் இருந்தும் கண்டனங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அமெரிக்கத் தூதுவர் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து தாக்குதல் குறித்த தனது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார்.
மேலும் பல ஐரோப்பிய நாடுகளும் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்தன. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் கட்சித் தலைவர்களும் கண்டனங்களை வெளிப்படுத்தியிருந்தனர்.
இவற்றைத் தொடர்ந்து காயங்களுக்குச் சிகிச்சை பெற்றுக்கொண்ட போராட்டக்காரர்கள் மீண்டும் போராட்டக்களத்திற்குத் திரும்பத் தொடங்கினர். அவர்களுக்கு ஆதரவாக மேலும் பலரும் பிற்பகலில் போராட்டக்களத்தில் திரளத் தொடங்கினர்.
மாலையில் போராட்டக் களம் மீண்டும் வழமைக்குத் திரும்பின. புதிய கூடாரங்களும் அமைக்கப்பட்டு போராட்டம் வழமையைப் போன்று தொடர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ரணிலுக்கு எதிரான இந்தப் போராட்டம் அவர் பதவி விலகும் வரை தொடரும் என்று போராட்டக்காரர்கள் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

---

## புதிய...

அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் நிதி அமைச்சராகவும் நீதி அமைச்சராகவும் இருந்தவரான அலி சப்ரி இந்தத் தடவை அயலுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட் டுள்ளார்.
புதிதாகப் பதவியேற்றுக்கொண்ட அமைச்சர்கள் விவரம் வருமாறு:
**1.** கல்வி அமைச்சர் - சுசில் பிரேம ஜயந்த
**2.** சுகாதாரத்துறை, நீர்வளங்கள்அமைச்சர் - கெஹெலிய ரம்புக்வெல
**3.** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் - பந்துல குணவர்தன
**4.** விவசாயத்துறை மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் - மஹிந்த அமரவீர
**5.** நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் - விஜயதாஸ ராஜபக்ஷ
**6.** சுற்றுலாத்துறை மற்றும் காணி விவகாரத்துறை அமைச்சர் - ஹரீன் பெர்னாண்டோ
**7.** பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் - ரமேஷ் பத்திரன
**8.** வலுச்சக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் - காஞ்சன விஜேசேகர
**9.** நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் - பிரசன்ன ரணதுங்க
**10.** அயலுறவுத்துறை அமைச்சர் - அலி சப்ரி
**11.** பௌத்த மதம் மற்றும் மத விவகார அமைச்சர் - விதுர விக்கிரமநாயக
**12.** சுற்றாடல்துறை அமைச்சர் - நஸீர் அஹமட்
**13.** கடற்றொழில் வளங்கள் அமைச்சர் - டக்ளஸ் தேவானந்தா
**14.** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் - ரொஷான் ரணசிங்க
**15.** வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் - மனுஷ நாணயக்கார
**16.** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் - டிரான் அலஸ்
**17** வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் - நளின் பெர்னாண்டோ
**18.** அரச சேவை , மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு - பிரதமர் தினேஸ் குணவர்தன

# தலைவராகிய
# தனி யானை

நியூட்டன்



ஒருவர் தனது நண்பரிடம் பண உதவி கேட்டார். ஏன் பணம் என்று நண்பர் கேட்க, "ஐயாயிரம் ரூபா சீட்டுக் காசு கட்டவேணும் கொஞ்சக் காசு குறையுது" என்றார். "எவ்வளவு காசு குறையுது?" என்று நண்பர் கேட்க, "நாலாயிரத்து ஐந்நூறு ரூபா குறையுது" என்றார். அது போலவே ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகத் தன்னிடமிருந்த ஒரே ஒரு வாக்கை முதலீடாக வைத்து 133 வாக்குகளைப் பெற்று அரச தலைவராகியிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

அவர் தனது மூளையாலும் பொறுமையாலும் நிதானத்தாலும் சூழலைச் சரியாகப் பயன்படுத்தும் திறனாலும் இந்த வெற்றியைப் பெற்றார். ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் வாழ்க்கையில் அதிக தோல்விகளைச் சந்தித்தவர், அவமானங்களைச் சந்தித்தவர். இனிமேல் தலையெடுக்க முடியாது எனப் பலரும் நினைத்திருந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் கிடைத்த சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் வல்லமை அவருக்கிருந்தது. அறிவுப் பலத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு ரணில் நல்ல உதாரணம். அதனால்தான் அவர் சார்ந்த கட்சி முழுமையாகத் தோல்வியடைந்த நிலையிலும் நாடாளுமன்றம் சென்ற அவரால் அரச தலைவராக முடிந்திருக்கிறது.

**ஏனையோரின் அரசியல் சாணக்கியம்**

அரச தலைவர் வேட்பாளர் போட்டியிலிருந்து தான் விலகுகிறார் என்றும் தனது கட்சியின் வாக்கை மற்றைய வேட்பாளரான டலஸ் அழகப்பெருமவுக்கு அளிக்கிறார்ப்பது என்றும் வாக்கெடுப்புக்கு முதல் நாள் சஜித் பிரேமதாச அறிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்கூட டலஸையே ஆதரிப்பதாக அறிவித்தது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வீட்டுக்குச் சென்று (சஜித், டலஸ் ஜி.எல். பீரிஸ், டிலான் பெரேரா) கூட்டமைப்பினருடன் பேசிக் கூட்டமைப்பினரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாகக் கடிதம் ஒன்றை டலஸ் அழகப்பெரும ஒப்பமிட்டுச் சம்பந்தனிடம் வழங்கினார் எனப்படுகிறது. இதுவரை அந்தக் கடிதம் வெளியே காட்டப்படவில்லை. அவர்கள் ஒன்றாக நின்ற ஒளிப்படம் ஒன்று மாத்திரமே வெளியாகியது. இது பரபரப்பை ஏற்படுத்தியது. அந்தச் சம்பவத்துக்கு முதல் நாள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களைச் சந்தித்துப் பேசினார் சஜித். இந்தப் பின்னணியில் பார்த்தால் ரணில் படுதோல்வியடைவார் என்ற தோற்றப்பாடும் அது ஓர் அரசியல் பிரளயத்தை ஏற்படுத்தப் போகின்றன என்றும் ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் கருத்து வெளியிட்டனர். இதைத் தமிழ் ஊடகங்கள் மேலும் மிகைப்படுத்தின.

முன்னாள் அரச தலைவரும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரியும் டலசுக்கு ஆதரவளிப்பதாகத்

தெரிவித்ததால் இது உண்மையாகிவிடுமோ என்கிற தோற்றப்பாடு இருந்தது. ஏனெனில் அதற்கு முன் வாக்களிக்காமல் நடுநிலமை வகிக்கவிருப்பதாகக் கூறி வந்தார். ஆனால் கடைசியில் ரணில் மிகப் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வென்றார். அந்த வெற்றிக்கு எதிராக எந்தக் கிளர்ச்சியும் வெடிக்கவில்லை.


**இடம்மாறி வாக்களிக்கக் காரணம்**

சஜித் அணி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ், முஸ்லிம் கட்சிகள் டலசுக்கு ஆதரவு எனக் கூறிய போதும் இரகசிய வாக்கெடுப்பு என்பதால் பலர் இடம்மாறி ரணிலுக்கு வாக்களிக்க வாய்ப்பிருந்தது. பலர் தமது கட்சிக் கொள்கையை மீறி ரணிலுக்கு வாக்களித்தனர். அதற்குக் காரணம் நாடாளுமன்றம் கலைக்கப்படாது பாதுகாக்கக்கூடியவர் ரணில் என்பதே. அதனால் தமக்குரிய ஓய்வூதியத்தை அவர்களால் பெறமுடியும். அதேவேளை வாக்களிப்பதற்குப் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இதுதான் தமக்கிருக்கும் இறுதி வாய்ப்பு என்பதன் அடிப்படையிலும் அவ்வாறு பலர் செய்திருக்க வாய்ப்புண்டு. இதைதவிட வாசுதேவ நாணயக்கார, கம்பன்பில, விமல் வீரவன்ச ஆகியோர் ஊடகங்களில் குத்தி முறிந்தபோதிலும் அவர்களின் கட்சி வாக்குகள் ஒன்றிரண்டே கைவசமிருந்தன. இவ்வளவு கட்சிகளும் சேர்ந்து 82 வாக்குகளை மட்டுமே பெற்றிருக்கின்றன.

**சிறுபான்மைக் கட்சிகள் ஓரிடத்தில்**

கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள் ரணிலுக்கு எதிரான பக்கத்தில் நின்றன. சுமந்திரன் சாணக்கியன், ரரவூப் ஹக்கீம் அகியோர் கொழும்பு நூல் நிலையத்தில் போராட்டக்காரர்களைச் சந்தித்தனர். ரணிலைப் பதில் அரச தலைவராக ஒரு நாள் இருக்க அனுமதித்தாலும் அது பிச்சினையாகிவிடும். போராட்டக்கார்களாகிய நீங்கள் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் எனச் சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.

சிறு பான்மைக் கட்சித் தலைவர்களின் தீர்மானங்களுக்கு மாறாக உறுப்பினர்கள் வாக்களித்ததும் கட்சித் தலைவர்களின் கருத்தை உறுப்பினர்கள் பின்பற்றவில்லை என்பதையுமே இது தெட்டத் தெளி வாகக் காட்டுகிறது. இந்தக் கட்சிகளைவிட ஒரு வாக்கை மட்டும் செலுத்தக்கூடிய மிகக் குறைந்த வல்லமையுடன் இருந்த ரணில் 133 வாக்குகளை ஏனைய கட்சிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அந்தக் கட்சிகளை ஒருங்கிணைத்தார் என்பதே மிகப் பெரிய சாதனை.



இந்த வார சமையல்



# கொத்தமல்லிச் சம்பல்

செத்தல் மிளகாயில் சம்பல், பச்சை மிளகாயில் சம்பல், வெங்காயச் சம்பல், தக்காளிச் சம்பல் எனப் பலவித சம்பல்கள் இருக்கின்றன. அவை நமக்குப் பரீட்சயமானவையும்கூட. ஆனால், இது கொத்தமல்லிச் சம்பல்...! நம்மவர்கள் பலருக்கும் பரீட்சயமில்லாதது. சளித்தொல்லைக் காலத்தில் முன்னோர்கள் கை மருந்தாகப் பயன்படுத்தினர் என்று முதியவர்கள் சொல்கிறார்கள். ஒரு சில முதியவர்கள் இந்தச் சம்பலை இன்றும் ஆக்கியுண்கிறார்கள். அத்தகைய கொத்தமல்லிச் சம்பல் பற்றி இந்தமுறை பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

கொத்தமல்லி 50 கிராம், உள்ளி 5 துண்டுகள், இஞ்சி சிறியதுண்டு, உப்பு சிறியளவு, செத்தல் மிளகாய் 2 ஆகியன.

**எப்படிச் செய்வது...?**

கொத்தமல்லியை வறுத்தெடுத்துக்கொள்ள வேண்டும், உள்ளித் துண்டுகளைச் சுட்டுக் கொள்ளவேண்டும். இஞ்சித்துண்டைச் சுத்தம் செய்வதுடன் அம்மி ஒன்றில் மல்லியை வைத்துச் சொரசொரப்பாக அரைத்ததும் செத்தல் மிளகாய்களையும் சுட்ட உள்ளியையும் சேர்த்து அரைக்கவேண்டும். பின்னர் இஞ்சி, உப்பு ஆகியவற்றை வைத்து அரைத்தெடுத்தால் கொத்தமல்லிச் சம்பல் தயார். இவற்றோடு வாசனைக்குக் கறிவேப்பிலையும் சேர்க்கலாம்.

# பழையவை அல்ல அடையாளங்கள்...!

**சத்தியநாதன்**

பிரித்தானியர்களைப் பொதுவாகவே "கொன்சவேட்டிவ்" என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். அதன் அர்த்தம் அவர்கள் பழமையைப் பேண விரும்புபவர்கள் என்பதாகும். புதிய நாகரீகங்களுக்கு வித்திட்டாலும் பழமையைப் பின்பற்ற விரும்புபவர்களும் அவர்கள்தான். இந்தப் பழமையை அரச குடும்பமும் பிரித்தானிய மக்களும் இன்றுவரை பின்பற்றுகின்றனர். இந்தப் பழக்கம் அவர்களின் வீடுகள், ஊர்கள், நாடு என முழுவிடத்திலும் பேணப்படுகிறது.

தமிழர்களைப் பொறுத்தவரை இதில் பூச்சிய நிலையே காணப்படுகிறது. பழயை பொருள்கள், முன்னோர்கள் பயன்படுத்திய பொருள்கள் என எதையும் பத்திரப்படுத்தாத நிலை காணப்படுகிறது. மதம் என்கிற பிணைப்பில் இறுக்கமாக இருந்தாலும்கூடப் பழைமையான கடவுள் சிலைகளைக்கூட அகற்றிவிடும் நிலை தமிழர்கள் மத்தியில் காணப்படுகிறது. பழமையான வழிபாடுகள், சிலை வணக்கங்களுக்குப் பயன்படுத்திய பழைய சிலைகள் பலவற்றை அகற்றிவிட்டுப் புதிய சிலைகளை வைப்பதில் பெருமைப்பட்டுக் கொள்ளும் இனமாகத் தமிழர் இருக்கின்றனர்.

**நினைவுச் சின்னங்களாகக்கூடப் பேணுவதில்லை**

தமது முன்னோர்கள் பயன்படுத்திய பொருள்களைப் பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதற்கு மாறாக அவற்றை ஒதுக்குப் புறங்களில் கைவிடுகின்றனர். அவற்றை ஒரு நினைவுச் சின்னமாகப் பேண முற்படுவதில்லை. அத்தகைய பொருள்கள் பலவற்றை உல்லாச விடுதிகளும், ஹொட்டல்களும், மண்டபங்களும் அழகாகக் காட்சிப்படுத்தியுள்ளபோது அவற்றைப் பிரமிப்புடன் பார்க்கும் பழக்கமே இருக்கிறது. தவிர தங்கள் வீடுகளில் அவற்றை நினைவுச் சின்னங்களாகக் காட்சிப்படுத்தும் எண்ணம் எழுவதில்லை.

தமது பாட்டன் பயன்படுத்திய சைக்கிளை இரும்பு வியாபாரிக்கு விற்றுவிட்டு மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் இல்லாத இந்த நிலையில் யாரிடமாவது பழைய சைக்கிள்



உண்டா என விசாரித்தபடி பலர் அலைந்து திரிவதைக் காணமுடிகிறது. பழைய சைக்கிள்லகிடைக்காத விடத்துப் பெரும் பணம் கொடுத்துப் புதிய சைக்கிளை வாங்குகின்ற நிலை பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. அரிதாக ஒரு சிலர் தமது முன்னோரின் சைக்கிள்களைத் திருத்தம் செய்து பெருமையுடன் பயன்படுத்துகின்றனர். ஒரு சிலர் பழைய சைக்கிள்களை விற்காது சிறிய திருத்தம் செய்து வீதிக்கு இறக்கியிருக்கின்றனர்.

**பழைய ஞாபகங்களின் மீட்பு**

தமது பாட்டனாரின் பழைய சைக்கிளை ஓடும்போது அவரை நினைத்துப் பெருமைப்படும் பாக்கியம் பலருக்குக் கிடைத்திருக்கிறது. சைக்கிள்கள் மாத்திரமல்ல பழைய பாத்திரங்களைப் பயன்படுத்தும் பெண்களுக்கு அவர்களின் முன்னோர்களின் நினைவுகள் மனதுக்கு அருகில் இருக்கின்றன. அவற்றைத் தமது பிள்ளைகளுக்குப் பகிரும் பாக்கியமும் நிகழ்கிறது. சைக்கிளைப்போல பாத்திரங்கள், பாவனைப் பொருள்கள் பலதையும் இரும்பு வியாபாரிகளுக்கு விற்றுவிட்டுப் பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் பொருள்களைப் பலர் வாங்கிவிட்டனர். அவர்களது முன்னோர்கள் பாவித்த செம்பு, மூக்குப்பேணி போன்ற பொருள்கள் பலரது வீடுகளில் இப்போது இல்லை.

உழைப்பது, சேமிப்பது என்பதற்கப்பால் ஏற்கனவே இருப்பவற்றைப் பாதுகாப்பதும் வாழக்கையில் ஒருவகைப் பேணுதல் ஆகும். அவைகூட இனத்தின் அடையாளத்தையும் கலாசார விழுமியங்களையும் காட்டுவதற்கு உதவுகின்றன.

முன் சந்ததியினருக்கு விட்டுச் சென்றவற்றைப் பாதுகாப்பது மட்டுமல்லாது இனி வரப்போகும் சந்ததி அதன் பெறுமதி உணர்ந்து செயற்படவும் கற்றுக்கொடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. கலப்பை, அரிவு வெட்டும் கத்தி, மீன்பிடி வள்ளங்கள், அவை சார்ந்த பொருள்கள் எனப் பல கைவினைப் பொருள்களைப் பாதுகாத்து இனிவரும் காலத்திலாவது தமிழ் மக்கள் அடையாளமுள்ள இனமாக இருக்க வேண்டும்.

இங்கு வருவதுபோல பழைய பொருள்களை வாங்கும் வாகனம் பிரித்தானியர்களின் வீடுகளுக்குச் சென்றால் அவர்கள் எதையும் விற்க மாட்டார்கள். பழமை பேணுவது என்பது தகாத பழக்கமல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். அந்தச் சிந்தனையை இந்த இடர்காலத்தில் பழைய சைக்கிள்கள் ஏற்படுத்திச் சிந்திக்க வைத்திருப்பது சிறப்பானது.

# எமது நிலம்

## ஆக்கிரமிப்பிலேயே உள்ளது...?

**மருத்துவர். சி. யமுனாநந்தா**



இலங்கையில் தற்போது நடைபெறும் அரசியல் புரட்சியானது நவீன அரசியல் விஞ்ஞானத்தில் ஒருங்கிய போரும் ஒருங்கிய பயங்கரவாதமும் எவ்வாறு சமூகத்தில் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் என்பதை எடுத்துக்காட்டுவதற்குச் சிறந்த உதாரணமாக இருக்கும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையுடைய உலக மயமாதலில் ஒன்றிய வளர்முக நாடுகளில் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கலைக் கட்டுப்படுத்தும்போது மக்கள் கலவரம் அடைவது இயல்பு. இதை இன்று உலக வல்லரசுகள் மறைமுகப் போர் ஆயுதமாகக் கையில் ஏடுத்துள்ளன. உலக வல்லரசுகளின் ஒருங்கிய போர்க் களமாகத் தற்போது இலங்கை மாறியுள்ளது. இதனால் மக்கள் புரட்சியும், சமூக வன்முறைகளும் அதிகரித்துள்ளன.

இத்தகைய சூழலில் அத்தியாவசியப் பொருட்களைப் குறிப்பாக எரிபொருளினைப் பெறுவதற்காக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை ஒருவகையில் வன்முறைக் கும்பல் தன்மையாகப் பார்க்கப்படுகின்றன. ஆனால், இவை ஒருங்கிய பயங்கரவாதமாகக் கணிக்கப்படல் வேண்டும்.

**அரசியல்வாதிகள் மட்டும் காரணமல்ல**

இலங்கையின் தற்போதைய நிலைக்கு அரசியல்வாதிகள் மட்டும் காரணம் அல்லர். அமைச்சுக்களின் உயரதிகாரிகளும் மாகாண மட்ட, மாவட்ட மட்ட உயர் அதிகாரிகளும் இணைந்து

மேற்கொண்ட ஊழல்களும், சூறையாடல்களும் முக்கிய காரணங்களாகும். இவை தமிழ், சிங்களப் பிரதேசங்கள் அனைத்துக்கும் பாகுபாடின்றிப் பொருந்தும்.

அடுத்துத் தமிழ் மக்கள் மிகவும் அமைதியாகத் தற்போதைய மாற்றங்களை அணுகவேண்டிய சூழல் உள்ளது. ஏனெனில் எமக்கு இனிப்போராடுவதற்கு உலகில் ஒரு தளம் இல்லை. எமது நிலம் ஆக்கிரமிப்பிலேயே உள்ளது. நீதியை நாம் கேட்பின் அது முழு உலகுக்கும் பயங்கரவாதமாகவே தென்படும்.

உதாரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குரிய பகுதி யாழ்ப்பாணம் மீனாட்சிபுரத்தில் படை முகாமாகவே உள்ளது. காசநோய் மருத்துவமனை மயிலிட்டியில் படைத்தளவலயமாக உள்ளது. இவ்வாறு இலங்கைப் படையினரால் மனிதாபிமான சமூக நெருக்கீடுகள் தமிழர்களுக்கு நிறையவே உள்ளன..

**மனிதநேய அநாதைகள்**

தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் மனிதாபிமான உதவிகளை மட்டுமே எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர். 1980 - 1985 இல் அகதிகளாகவும், 1985 - 1990இல் ஏதிலிகளாகவும், 1991 - 1995இல் புலம் பெயர்ந்தவர்களாகவும், 1996 - 2009 இல் உள்ளக இடம்பெயர்ந்தவர்களாகவும் வாழ்ந்த தமிழர்கள் 2009 - 2022இல் மனிதநேய அநாதைகளாகவே காணப்படுகின்றனர்.

எமக்குரிய இடர்மீட்புத்திட்டத்தை நாமே செயற்படுத்தல் வேண்டும். தென்னிலங்கையில் நிகழும் மாற்றங்களை நாம் கருத்தில் எடுக்கவேண்டிய அவசியமே இல்லை. இவ்விடர் நிலையில் இந்திய அரசு இலங்கையின் வடக்குக் கிழக்கு பிரதேசத்தில் மனிதாபிமான உதவித் திட்டத்தை நேரடியாக மேற்கொள்ளல் மிகவும் அவசியமானது.

---

# என்னதான் நடக்குது?



**கதிரேசன் காத்தவராயன்**

சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டுப்பக்கம் போய் வருவமெண்டு வெளிக்கிட கனகரும் தம்பரும் வந்தினம். அவையும் அங்கைதான் போவமெண்டு வந்ததாச் சொல்லிச்சினம். 'சரி வாங்கோ போவம்' எண்டு போனம். மாஸ்ரர் வலு உற்சாகமாய் 'வாருங்கோ... வாருங்கோ... இருங்கோ' எண்டு இருத்தினார். வசதியாய் இருந்துகொண்டம்.

'என்னப்பா... நாட்டு நடப்புகள்... எப்பிடிப் போகுது பாத்தியளோ?'எண்டு மாஸ்ரர் சொல்லி நிப்பாட்டி எங்களைப் பாத்தார். 'போகுது போகுது... எல்லாத்தக்கும் வரிசையிலையில்லே போகுது?'எண்டார் கனகர். 'எனி வரிசையில்லாமலுக்கு பெற்றோலடிக்கிறதுக்கல்லே வழி பாக்கிறாங்களாம்... போனிலையல்லே பதியிறாங்கள்...' எண்டு கொஞ்சம் பெருமையோடை தம்பர் சொன்னார்.

'போனிலை பதிஞ்சாலென்ன எங்கை பதிஞ்சாலென்ன? பெற்றோல் இருக்க வேணுமே?' எண்டு கொண்டு வீட்டுக்கையிருந்து சுதன் வந்தான். 'முதலிலை பெற்றோல் நாட்டுக்கை வாறதைச் சரிப்படுத்தவல்லேவேணும் அப்பதானே செற்றுக்குப் பெற்றோல் வரும்... எல்லாருக்கும் கிடைக்கும்' எண்டார் கனகர். 'உண்மைதானப்பா கனகு... வெறுங்கையாலை முழம் போடுறது எண்டு சொல்லுறது இதைத்தான்' எண்டு மாஸ்ரர் சிரிச்சார்.

'இப்ப ஆட்சியிலை இருக்கிறவையினரை கெட்டித்தனமே இதுதான்... அரிசி விக்கிற விலையைப்பற்றி ஆரும் கதைக்கிறமோ? பாண் விக்கிற விலையைப் பாருங்கோவன்... அதைப்பற்றி ஆராவது கதைக்கிறமோ? எல்லாரும் பெற்றோல் கதைதான்...' எண்ட மாஸ்ரரின்ரை குரலிலை எரிச்சலும் ஏக்கமும் இருந்துது. 'உண்மைதான் மாஸ்ரர்... சனத்தின்ரை கவனத்தை தேவையில்லாத பக்கமாய் வைச்சிருக்கிறதாலை தங்கடை அலுவலுகளை சந்தடிப்படாமல் செய்யலாமல்லே?' எண்டு நான் சொல்ல 'சரியாச் சொன்னீர் கதிரேசு' எண்டார் மாஸ்ரர்.

'அப்ப பெற்றோல் டீசலதுகள் தேவையில்லாத சாமானுகளோ?' எண்டார் தம்பர். 'தம்பு மாமா... தேவையில்லை எண்டு ஒண்டு இருக்கோ? தேவையளிலை முக்கியமானதுகள் அதுகளைவிடக் கனக்க இருக்கல்லே?' சுதன் சொல்லிக்கொண்டிருக்க முருகேசர் வந்து இருந்துகொண்டார் ஒரு சிரிப்போடை. 'என்னப்பா முருகேசர் சந்தோசமான செய்தியேதோ வைச்சிருக்கிறீர் போலை கிடக்கு?' எண்டார் மாஸ்ரர். 'எல்லாமே சந்தோசப்படுத்துகிற செய்தியள்தானே? காஸ் கப்பல் வருகுது, டீசல் கப்பல் வருகுது, பெற்றோல் கப்பல் வருகுது, வெளிநாட்டுக் கடனுகள் வருகுது... எண்டுதானே நாளாந்தம் செய்தியள் வருகுதுகள்... சந்தோசமோ இல்லையோ?' எண்டார் முருகேசர்.

'ம்ம்ம்... சாமானுகள் வருகுதோ இல்லையோ காது குளிருற செய்தியள்தான் நிறைய வருகுது..' எணடார் மாஸ்ரர். சுதன் சிரிச்சுக்கோண்டே 'அதுதான் கதிரேசு மாமா சொன்னதும்! எங்கடை கவனத்தைக் கலைக்கிற வேலைதான் இது' எண்டான். 'அதுதான் உண்மை' எண்டார் முருகேசர். 'அரசியல் குழப்பங்களை மறைக்கிறதுக்காயிருக்கும் என்ன?' எண்டார் கனகர்.

'அதுதான் நடக்குது தங்கடை குத்துகள் வெட்டுகளை சனம் கவனிக்கக் கூடாதெண்டு சனத்தின்ரை கவனத்தை திருப்பிறதுக்கு சோக்கான வழியல்லே?'

# முகாமிலிருந்து தப்பியோடியவர் இயக்கத்தில் சேர்த்தவருடன் மீண்டும் வந்தார்

**கமலநாதன்**

கேணல் என்.பி.பெரேரா என்பவர் கடுவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர். 1985இல் படைப்பிரிவில் சேர்ந்த இவர் நாட்டின் பல பாகங்களிலும் கடமையாற்றினார். பம்பை மடு இடைத்தங்கல் முகாமை உருவாக்கியவர். 2010இன் பின் தனது உயர் கல்வியை உளவியல் மற்றும் பௌத்த கல்வி ஆகிய துறையில் முடித்தார்.

இடைத்தங்கல் முகாமுக்குப் பொறுப்பாக இருந்தபோது அங்கு தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் தொடர்பில் அவர் அவதானித்த விடயங்களை நிராயுத (ஆயுத

**அவர்கள் படம் பார்ப்பதில் அதிக விருப்புடன் இருப்பதை அறிந்தேன். சினிமாப் படங்களைப் பார்க்கப் புலிகள் அனுமதிக்காததால் அவர்களுக்கு அதன் மேல் ஆர்வம் இருந்தது.**

மற்ற) என்ற தலைப்பில் நூலாக எழுதினார். தனது அனுபவங்களை நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் கீழ்வருமாறு பகிர்ந்துள்ளார்.

நான் 1985இல் படையில் இணைந்தேன். பின்னர் நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றினேன். ஆனால் நலன்புரி முகாம் ஒன்றைத் தொடங்கி இடம்பெயர்ந்தவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு அதற்கு முன்னர் எனக்கிருக்கவில்லை. அது ஒரு வேறுபட்ட அனுபவம். மிக நீண்டகாலமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்தவர்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு அதிகம் சிரமப்பட வேண்டியிருந்தது.

படையினர் பற்றிய அவர்களுக்கிருந்த வெறுப்பால் அவர்களின் மனநிலையையும் தேவைகளையும் புரிந்து கொள்வதில் மிகச் சிரமம் இருந்தது. பாதிக்கப்பட்ட மக்களுடன் பழகுவதில் முக்கிய பிரச்சினையாக இருந்தது மொழி. எனக்குத் தமிழ் தெரியாது. அவர்களுக்குச் சிங்களம் தெரியாது.

மொழிப் பிரச்சினைக்கு அப்பால் பன்னாட்டு மனித உரிமைச் சாசனத்தின்படி "உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட மக்களை மனிதாபிமானமாக நடத்தவேண்டும்"



என்பதிலேயே அதிக கவனம் செலுத்தினேன்.

பம்மைமடு இடைத்தங்கல் முகாமில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு என்று பல மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அந்த முகாமில் 5 ஆயிரம் பேர்வரை தங்க வைக்கப்பட்டார்கள். புலிகள்

---

எண்டார் முருகேசர். 'ஒவ்வொரு காலத்திலை ஒவ்வொண்டு... முந்தி கிறீஸ் பூதம்.. பிள்ளை பிடிகாறர்... கொரோனா ... இப்ப பெற்றொல்...' எண்டு சிரிச்சார் மாஸ்ரர்.

'உதோடை ஆட்சியைப் பிடிக்கிறவை தாங்கள்தான் மக்களிலை அக்கறையான ஆக்களெண்டு காட்டவும் இப்ப சாமானுகளை விநியோகிக்கிற ஆக்களைப் பிடிச்சு டீல் பண்ணி தட்டுப்பாட்டை உண்டாக்கியிருக் கலாமெண்டும் சந்தேகப்படுகினம்' எண்டு சுதன் சொல்ல 'அடப்பா உப்பிடியெல்லாம் யோசிக்கிறாங்களோ?' எண்டு வாயைப் பிளந்தார் தம்பர். 'அதுதானே தம்பர் அரசியல்... அதுகும் வியாபாரமும் ஒண்டுதானே' எண்டார் மாஸ்ரர்.

'ஆட்சியிலை ஆர் கொஞ்சமெண்டாலும் உறுதியாய் இருக்கிறாரோ அவற்றை கெட்டிக் காறத்தனத் தாலைதான் நடந்த மாதிரி சாமானுகள் வெளியாலை வரும்... வெளிநாடுகளாலையும் வரும்...' எண்டு நான் சொல்ல 'ஆ... அப்ப பழைய விலையிலை தட்டப்பாடில்லாமல் சாமானுகள் வரப்போகுதோ?' எண்டு மற்றத்தரம் வாயைப் பிழந்தார் தம்பர். 'ஓஓ ஓ... எல்லாம் வரப்போகுது... பாத்துக் கொண்டிரு... மரவள்ளி இறைப்பைக் கைவிட்டிடாதை... கொரோனாக் காலத்திலை வீடுகளிலை செய்த வேலையளைத் தொடந்திருந்தாலே காணும்... நாங்கள் எதைத்தான் செய்தம்... செய்ய விட்டான்கள்;..' எண்டுகொண்டு வந்திட்டன்.

சொல்வதைக் கேட்டுப் பழகிய அந்த மக்களை மீள் குடியேற்றம் செய்யும் வரை பராமரிப்பதே எனது பணியாக இருந்தது. இந்த மக்கள் வாழ்ந்த ஊர்களில் கண்ணிவெடிகள் அகற்றப் படும்வரை அவர்கள் பம்பைமடு முகாமில் தங்கவேண்டியிருந்தது. அங்கிருந்தவர்கள் ஆண்,பெண் என 6 வயது தொடக்கம் 70 வயது வரை இருந்தார்கள். இந்த மக்களுக்குத் தேநீர், உணவு, கழிப்பறை வசதிகள், குடி தண்ணீர், குளிக்கும் வசதி, மருத் துவ வசதி என எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியிருந்தது.

அந்த மக்களுக்குள் முன்னாள் போராளிகளும் தமது குடும்பத்தினருடன் கலந்திருந்தார்கள் என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் முதல் 3 மாத காலம் அவர்களைக் குடும்பங்களிலிருந்து பிரிக்காமல் வைத்திருந்தோம். பின்னர் அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்குப் பிரித்தார்கள். அவர்களை வேறு இடங்களுக்குக் கொண்டுசென்றார்கள்.

புலிகள் விடயத்தில் அதிக ஈடுபாடும் பற்றும்கொண்ட பலர் எம்முடன் நெருங்கிப் பழகவோ, சாதாரணமாக இருக்கவோ இல்லை. அவ்வாறானவர்களை வேறாக அவதானிக்க முடிந்தது. கிராம அலுவலர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் எம்முடன் இணைந்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற உதவினார்கள். முன்னாள் போராளிகளைப் பிரித்து எடுத்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு தொகையானவர்கள் எமது முகாமுக்குள் இருந்தார்களா? என்று.

## மொழிபெயர்ப்பில் உதவிய அகிலன்

கிளிநொச்சியைச் சேர்ந்த அகிலனுக்கு 70வயது. அவருக்கு நன்கு சிங்களம் தெரியும். அவரது உதவியுடன் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுத்தேன். சீதா என்கிற ஆசிரியை ஒருவர் மாணவர்களுக்கான கல்வியைத் தொடர ஏற்பாடு செய்து தருமாறு கேட்டார். அந்த முகாமில் வேறு பல ஆசிரியர்களும் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் இருந்தபோதிலும் அரச சம்பளத்தை எடுத்தார்களே தவிர மாணவர்களின் கல்வி தொடர்பில் எவரும் என்னுடன் கதைக்கவில்லை. சீதா என்ற ஆசிரியை மாத்திரம் இது விடயத்தில் முயற்சித்து அங்கு ஒரு பாடசாலையை நடத்துவதற்கு 3 பெரிய கொட்டில்களை அமைத்தோம். பயனாக 400 மாணவர்கள் வரை கல்வி கற்றார்கள். ஏனைய ஆசிரியர்களும் பின்னர் அங்கு படிப்பித்தார்கள்.

உயர்தரம் கற்கும் மாணவர்களில் கலை, வர்த்தகப் பாடங்களைக் கற்பிக்கப் போதியளவு ஆசிரியர்கள் இருந்தார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த எம்மா என்ற மாணவி விஞ்ஞானப் பிரிவில் படித்துக்கொண்டிருந்தார். அவரை வவுனியா நகரப் பாடசாலை ஒன்றுக்கு அனுப்பிப் படிப்பிக்க வசதி செய்து தருமாறு அவரது குடும்பத்தினர் கேட்டார்கள். அது முகாம் நடைமுறைக்கு அப்பாற்பட்டதாக இருந்ததால் அவரை பாடசாலையில் சேர்த்து கிறிஸ்தவ கன்னியர் மடத்தில் தங்க வைத்தோம். அவர் தற்போது மருத்துவராகி சென்னையில் வாழ்ந்து வருகிறார். 2018இல் அவரது திருமணம் சென்னையில் நடந்தது. பாடசாலை அதிபர், கன்னியர் மட அருட்சகோதரி ஒருவருக்கும் எனக்கும் அழைப்பு விடுத்திருந்தார். பாடசாலை அதிபர் நோயுற்று இருந்ததால் நானும் அருட்சகோதரியும் கலந்து கொண்டோம்.

## முகாமிலிருந்து தப்பியோடிய பாலமுருகன்

பாலமுருகன் புலிகளின் பிரதேசத் தலைவர்களில் ஒருவர். எமது முகாம் நடவடிக்கைக்கு எந்தவித இடையூறும் இன்றிச் செயற்பட்டார். என்னுடன் சுமூகமாக உறவு பேணினார். புலி உறுப்பினர்களுக்கான மறுவாழ்வுக்காக முகாமிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டபோதிலும் அவர்களுக்கான முதல் செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்படாத நிலையில் மீண்டும் எமது முகாமுக்குள் கொண்டு வந்து விடப்பட்டனர். திடீரென ஒரு நாள் இரவு 9 மணியளவில் பாலமுருகன் முகாமை விட்டுத் தப்பி ஓடிவிட்டார் என்று அறிவித்தனர். எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. முகாம் பொறுப்பாளரான நான் அரசுக்குப் பதில் கூறவேண்டியிருந்தது. முகாமைச் சுற்றிப் படையினர் தேடிய போதிலும் பாலமுருகனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

அதிகாலை 3மணிக்கு எனக்கு மற்றோர் தகவல் கிடைத்தது. பாலமுருகள் பிரதான வாசலில் வந்து நிற்கிறார் என்றும் இன்னொருவரையும் அழைத்து வந்திருக்கிறார் என்றும் கூறினார்கள். அங்குபோய் விசாரித்த போது பாலமுருகன் இவ்வாறு கூறினார். "இவரது பெயர் கருணாகரன், இவர்தான் என்னை இயக்கத்தில் சேர்த்தவர். தற்போது பெரிய வீடும் கட்டிக் குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்கிறார். நான் மறுவாழ்வுக்குப் போக முதல் இவரை அடித்துச் சைக்கிளில் ஏற்றி வந்தேன். அவரையும் மறுவாழ்வுக்கு அனுப்பவேண்டும்" என்று. கருணாகரனுக்குக் கடுமையாக அடித்ததால் உடலில் பல இடங்களில் காயங்கள் இருந்தன. அவற்றுக்கு மருந்திட்டு இருவரையும் மறுவாழ்வுக்கு அனுப்பினோம்.

## திரைப்படம் போடக் கேட்டார்கள்

சிறிய கூடார வீட்டுக்கு முன்னாள் சில இளைஞர்கள் வழமைக்கு மாறாகக் கூடி நிற்பதை அவதானித்தேன். ஏன் என்று பார்த்தபோது அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் மடிக் கணனியில் திரைப்படம் காட்டினார். அதற்குக் கட்டணமும் அறவிட்டார். அவரிடமிருந்த இறுவெட்டுக்களைப் பரிசோதித்தேன். பணம் அறவிட அனுமதியில்லை என்று தடுத்தேன். அதன் பின்னர் அவர்கள் படம் பார்ப்பதில் அதிக விருப்புடன் இருப்பதை அறிந்தேன். சினிமாப் படங்களைப் பார்க்கப் புலிகள் அனுமதிக்காததால் அவர்களுக்கு அதன் மேல் ஆர்வம் இருந்தது.

முகாமுக்கு வருகை தந்த புலிகள் அமைப்பைச் சாராத தமிழ் அமைச்சர் ஒருவரிடம் இந்த மக்களுக்குத் திரைப்படம் காட்டுவதற்கு இரண்டு திரைகளைத் தரமுடியுமா என்று கேட்டேன். இரண்டு வாரங்களுக்குள் அவற்றை அனுப்பி வைத்தார். அதன் பின்னர் இரண்டு இடங்களில் பெரிய திரைகளில் படம் வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைத்தன. அதன் பின்னர் இரவு 7.30, 11 மணி என இரண்டு படங்கள் பார்க்க அனுமதி கேட்டார்கள். அதையும் வழங்கினேன்.

எனது படைச் சேவை அனுபவத்தில் பம்பைமடு முகாமையும் அங்கு வாழ்ந்த மக்களையும் மறக்க முடியாது. இன்றும்கூட அவர்களில் பலரைச் சந்திக்கும்போது திருமணம் செய்து பிள்ளைகளுடன் தொழில்களில் ஈடுபட்டு மகிழ்வுடன் இருப்பதைக் காணும்போது மனநிறைவைக் காண்கிறேன்.

# அலைந்து திரியும் ஆணுறுப்பு...?

ந.சி.சித்தர்



காட்சிப்படுத்தி இரசிக்கிறார்கள்...! சிலை வடித்து ரசிக்கிறார்கள்...! பாதுகாப்பாக வைத்துப் பராமரிக்கிறார்கள்...! எதைத் தெரியுமா...? ஆணுறுப்பு ஒன்றைத்தான்...! அப்படி என்னதான் அதில் இருக்கிறது...? ஏன் அந்த ஆணுறுப்புக்கு இவ்வளவு மவுசு...? என்றெல்லாம் நினைப்பவராயின் மேலும் வாசியுங்கள். நிச்சயம் வசிப்பீர்கள் என்றுதான் நினைக்கிறேன். ஏனெனில் இது ஆணுறுப்பு இரகசியம்.

**இவரைத் தெரியுமா...?**

பிரான்சின் பேரரசராக இருந்த நெப்போலியனை உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அறிந்திருப்பீர்கள். ஆள் மிகப்பெரும் படை வீரன். பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் படைத் தளபதியாக இருந்த நெப்போலியனைத் தவிர்த்து ஐரோப்பிய வரலாற்றை நோக்க முடியாது. அந்தளவுக்குப் போரிலும் படை நகர்விலுமாக அப்போதைய ஐரோப்பாவில் தாக்கம் செலுத்தியவன்.

பிரெஞ்சுப் புரட்சியில் பிரான்சுக்கு எதிரான முதலாம் கூட்டணி மற்றும் இரண்டாம் கூட்டணிகளுக்கு எதிரான போர்களை வழிநடத்தியதன் மூலம் பிரபலம் பெற்றவன். 1799 ஆம் ஆண்டில் ஒரு பெரும்புரட்சியை நிகழ்த்தி, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் பிரான்சின் பேரரசனானான். 19ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளில் ஐரோப்பாவின் ஒவ்வொரு முக்கிய நாட்டுக்கு எதிராகவும் படை எடுத்தான்.

தொடர்ச்சியான பல போர் வெற்றிகளாலும், பின்னர் ஏற்படுத்திய விரிவான கூட்டணிகளினாலும் அவன் ஐரோப்பாவையே தனது பிடிக்குள் வைத்திருந்தான்.



தனது நெருங்கிய நண்பர்களையும், உறவினர்களையும், தனக்குக் கீழ் கொண்டுவரப்பட்ட நாடுகளின் அரசர்களாகவும், முக்கிய அலுவலர்களாகவும் நியமித்தான்.

1812 இல் இடம் பெற்றுத் தோல்வியில் முடிந்த ரஷ்யா மீதான பிரான்சின் ஆக்கிரமிப்பு நெப்போலியனுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இப்படையெடுப்பு, நெப்போலியனின் படைகளைப் பெரும் அழிவுக்கு உள்ளாக்கியது. இத்தோல்வியிலிருந்து நெப்போலியனால் மீளமுடியவில்லை. 1813 இல், ஆறாவது கூட்டணிப் படைகள், நெப்போலியனின் படைகளை முறியடித்து, பிரான்சுக்குள் நுழைந்தன. 1814இல் கூட்டணி நெப்போலியனைப் பதவியில் இருந்து இறக்கி எல்பாத் தீவுக்கு நாடு கடத்தியது. ஓராண்டிலும் குறைவான காலத்தில் நெப்போலியன் மீண்டு வந்து இழந்த அரசைக் கைப்பற்றினான். எனினும் 1815இல் வாட்டர்லூ என்னுமிடத்தில் அவன் தோல்வியைச் சந்தித்தான். புரட்சியாளனாக தொடங்கிப் படைத் தளபதியாகிப் பலதேசங்களையும் ஆண்ட பிரபல நபர்தான்

இந்த நெப்போலியன்.

**துண்டிக்கப்பட்ட ஆண்குறி**

வாட்டர்லூ போரில் தோல்வியடைந்த நெப்போலியன் செயின்ட் ஹெலினா என்கிற தீவுக்கு நாடு கடத்தப்பட்டு 1821 இல் அங்கு இறந்தான். அவன் இறந்ததற்கான காரணம் என்னவென்று உறுதியாகத் தெரியவில்லை என்றாலும் புற்றுநோய் காரணம் என்று சொல்லப்படுகிறது. நஞ்சூட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கதைகள் உலாவினாலும் பரம்பரையாக இருந்து வந்த இரைப்பைப் புற்று நோயே இறப்புக்குக் காரணம் என்கிறது அவரது உடலை ஆராய்ந்த மருத்துவத் தரப்பு. ஆனால், அவரது உடலை ஆராய்ந்தபோது அவரது ஆணுறுப்பைக் காணவில்லை. அது துண்டிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இறப்புக்கும் அதற்கும் காரணமில்லை எனினும் அது ஏன் துண்டிக்கப்பட்டது என்பது மர்மமாகவே இருக்கிறது. இறந்த பிறகு உடற்கூறுப் பரிசோதனை நடத்திய மருத்துவர் பிரான்செஸ்கோ அன்டோமர்ச்சி என்பவர் அந்த ஆணுறுப்பை வெட்டினார் என்று தெரியவந்தாலும் இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது தற்செயலானதா என்பதில் சந்தேகங்கள் இருக்கின்றன.






**அலைச்சல்படும் ஆணுறுப்பு**

நெப்போலியனின் வெட்டப்பட்ட ஆணுறுப்பு செயின்ட் ஹெலினா உன்கிற இடத்திலிருந்து கோர்சிகாவில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டது. 1916ஆம் ஆண்டு வரை பாதிரியார் ஒருவரிடம் இருந்த அதைப் பின்னர் லண்டனில் உள்ள புத்தக விற்பனை நிறுவனம் ஒன்று வாங்கியது. 1924 ஆம் ஆண்டில் பிலதெல்பியாவைச் சேர்ந்த புத்தக விற்பனையாளர் ஒருவர் அதை வாங்கினார். 1927 இல் நியூயோர்க் நகரத்தின் பிரெஞ்சு கலை அருங்காட்சியகத்தில் அது காட்சிக்கு வைக்கப்பட்டது. தோல் சுருங்கி அட்டை போல் இருக்கும் அந்தப் பொருளைப் பலரும் பார்வையிட்டனர். விமர்சித்தனர். பின்னர் அது டொனால்ட் ஹைட் என்ற சேகரிப்பாளருக்கு விற்கப்பட்டது.

ஹைட் இறந்துபோகப் புத்தக விற்பனையாளர் ஜோன் எப். ப்ளெமிங் அதை வாங்கினார். பின்னர் அந்த ஆண்குறியை ஏலத்தில் விற்க முயன்றார். சிறுநீரக மருத்துவரும் கலைப் பொருள் சேகரிப்பாளருமான ஜோன் கே. லாட்டிமர் 1977 இல் 3 ஆயிரம் டொலர்கள் கொடுத்து அதை வாங்கினார், அது தற்போது அவரது மகளிடம் இருக்கிறது என்று தேடிய தகவல்களின்படி தெரிகிறது. கிட்டத்தட்ட 2.5 சென்ரி மீற்றர் அளவுடைய வளைந்த அந்த உறுப்புப் பகுதி வெகு பிரபலமாகவுமுள்ளது.

**நஞ்சூட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கதைகள் உலாவினாலும் பரம்பரையாக இருந்து வந்த இரைப்பைப் புற்று நோயே இறப்புக்குக் காரணம் என்கிறது அவரது உடலை ஆராய்ந்த மருத்துவத் தரப்பு. ஆனால், அவரது உடலை ஆராய்ந்தபோது அவரது ஆணுறுப்பைக் காணவில்லை.**



66



தர்மராசா

# சிறைக்குள்...

## மகளின் இறுதிச் சடங்கில் பங்குபற்ற முடியாத கைதி

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அப்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர் என்று 22.2.2002 அன்று தொலைக்காட்சியில் பார்த்தேன். இந்தச் சம்பவம் கைதிகள் மத்தியில் குதூகலமான சூழலையும் ஒருவித நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருந்தது.

கல்முனையைச் சேர்ந்த சுரேன் என்ற நண்பர் 28.2.2002 அன்று விடுதலையானார். ஒரு வருடமாகப் பூசாச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர். அம்பாறை மேல் நீதிமன்றில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்ததால் பதுளை, அம்பாறை, பூசா என்று அடிக்கடி முக்கோண ஸ்கொட் போய்க் காலத்தைக் கழித்தார். கடைசி நாள்களில் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தங்கி அம்பாறை நீதிமன்றுக்கு வழக்குக்குப் போகும் சூழல் அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக ஏற்பட்டிருந்தது.

சுரேன் வீட்டில் மூத்த பிள்ளை. அவரது தாயார் ஞாயிற்றுக் கிழமை தவிர்நத நாள்களில் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் அவரைப் பார்க்க வருவார். அவருக்குச் சிறையில் இருக்கின்ற துன்பத்தைவிட வீடும் சிறையுமாகத் தாய் அலைந்து திரிவதால் தாய்க்கு ஏதாவது வருத்தம் வந்துவிடுமோ என்கிற மனக் கவலலையே அதிகமாக இருந்தது. மிகவும் சாந்தமானவர். என்னை விசிற் பார்க்க எவரும் வருவதில்லை என்பதால் தினமும் எனக்கும் சேர்த்து அவரது தாய் உணவு கொண்டு வருவார். நாம் இருவரும் ஒரே அறையில் இருந்தோம். பின்னர் அவரது விடுதலை எனக்கு வெறுமையைக் கொடுத்தது. ஆனாலும் அவரது வீட்டில் ஒரு வருடகாலமாக நிலவிய வெறுமை நிரப்பப்பட்டது எனக்கு மகிழ்ச்சி. அவரது வயதில் இருந்த கைதிகள் பலர் புகைத்தல் போன்ற பழக்கங்களில் ஈடுபட்டபோதும் அவர் சிறைக்குள் ஒழுக்கத்துடன் இருந்தார். அவரைப் பொறுத்தவரை சிறை ஒரு நல்ல விபத்து என்றே கூறவேண்டும்.

6.3.2002 அன்று மட்டக்களப்புச் சிறையில் ஒரு துக்கமான நிகழ்வு நடந்தது. வேலாயுதம் என்கிற 57



# நம்மவூர்ச் சுத்துமாத்து

## ஆட்டோக்காரர்களின் சுத்துமாத்து

பனிமலர் - கைதடி

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டமாம் என்கிற பழமொழியைப் போலாகிவிட்டது நாட்டில் பலரது நிலை. நாட்டின் நெருக்கடி நிலை பல கூத்தாடிகளை உருவாக்கி விட்டிருக்கிறது. அதில் முதலிடம் எரிபொருளைப் பெறுவதில் தொடர்ந்தும் முன்னிலையில் நின்று முண்டியடிக்கும் கும்பல்களுக்கும் எரிபொருள் கள்ளச் சந்தையாளர்களுக்கும் கிடைக்க அடுத்து வர்த்தகர்கள், வியாபாரிகள் என வரிசை நீள்கிறது. அந்த வரிசையில்தான் முச்சக்கர வண்டிச் சாரதிகளும் இருக்கிறார்கள்.

எரிபொருள் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டிப் பயணங்களுக்கு அளவுக்கு அதிகமான பணத்தை அறவிடுகிறார்கள். எரிபொருள் தட்டுப்பாட்டையும், கள்ளச் சந்தையில் அதற்கு நிலவுகிற விலையையும் காரணம் காட்டுவதுடன், 'இரவு பகலா அஞ்சாறு நாளா றோட்டில கிடந்தெழும்பி பெற்றோல் அடிச்சனாங்கள்'' என்றும் பல கதைகள் சொல்லிப் பயணத்தூரத்துக்கு அதிக அறவீட்டைக் கோருகிறார்கள்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அனைத்திலும் அதிகம் நிரம்பி வழிவதும் முச்சக்கர வண்டிகள்தான். திரும்பத் திரும்ப வரிசை கட்டுவது, இலக்கத் தகடுகளை மாற்றி மாற்றி எரிபொருள் நிரப்புவது, வரிசை பிடித்துச் சகாக்களுக்கு விற்பது எனப் பல தில்லுமுல்லுகளைச் செய்கிறார்கள். மோட்டார் சைக்கிள்களைவிடத் தொகையில் குறைவு ஆதலால் திரும்பத் திரும்ப வரிசை கட்டி இதுவரை காலமும் (எந்தவொரு நடைமுறையும் வகுக்கப்படாததால்) எரிபொருள் நிரப்பிய முச்சக்கரவண்டிகளே அதிகம். முச்சக்கர வண்டிச் சாரதிகள் அமைப்போ, சங்கமோ, ஒன்றியமோ எவையும் பயணத்

---

வயதுடைய கைதியின் 16 வயது மகள் மட்டக்களப்பு மருத்துவமைனையில் சுகவீனம் காரணமாக இறந்துவிட்டார். அவர் வழக்குக்காக மட்டக்களப்பு நீதிமன்றத்துக்குப்போய் வந்த சற்று நேரத்தில் அவரைச் சிறை அறையிலிருந்து வெளியே எடுத்தபோதுதான் எங்களுக்கு விவரம் தெரிந்தது.

அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த அவரது மகளின் உடலைச் சிறை ஊழியர்கள் அவருக்குக் காட்டினார்கள். சவ அடக்கம் செய்யவிருப்பது அவரது சொந்த ஊரான பழு காமத்தில். மட்டக்களப்பின் படுவான் கரைப்பகுதியில் அந்த ஊர் இருக்கிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்பதால் அவரை அங்கு அழைத்துச் செல்லும் நிலையில் சிறை நிர்வாகத்தினர் இருக்கவில்லை. 57 வயதான அவர் தப்பியோடி விடுவார், புலிச் சந்தேகநபரை அங்கு கொண்டு செல்ல முடியாது என்று காரணம் காட்டியது சிறை நிர்வாகம். இறுதி நிகழ்வுக்கு அவரைக் கொண்டு சேர்ப்பதற்கு மாற்று வழியேதும் இருக்கவில்லை.

அவர் அன்று முழுதும் அழுத வண்ணம் படுத்திருந்தார். எம்முடன் மட்டக்களப்புச் சிறையிலிருந்து மிக வயதான கைதி அவர். அதனால் நாம் அனைவரும் அவரது துன்பத்தில் பங்கெடுத்தோம். 8.3.2002 அன்று கண்டி மேல்நீதிமன்றிலிருந்த 28 வழக்குகள் கொழும்பிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன என்று வானொலிச் செய்தியில் அறிந்தேன். அதில் எனது வழக்குகளும் அடங்கும் என்று நினைத்தேன். அந்த ஏற்பாட்டின்படி கண்டியி லுள்ள எனது வழக்குகளை மட்டக்களப்பு நீதிமன்றுக்கு மாற்றும் முயற்சி சாத்திய மில்லை என்று புரிந்துகொண் டேன். எப்படியோ கண்டியி லிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டாலே அது பெரிய காரியம் எனத் திருப்திப்பட்டுக் கொண்டேன். (தொடரும்)

தூரத்துக்கான கட்டண அளவு குறித்த தகவல்களை விதிக்கவில்லை. இதனால் முச்சக்கரவண்டிச் சாரதிகள் சொல்வதுதான் அறவீடாக இருக்கிறது.

ஒவ்வொரு முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களிலும் கட்டண அறவீடு ஒவ்வொரு விதமாக இருக்கிறது. எரிபொருள் விலை உயர்வால் பேருந்து மற்றும் ரயில் கட்டணங்கள் அதிகரித்திருந்தாலும் மீற்றர் வண்டிகளுக் கான கட்டணம் குறித்த சரியான அறிவித்தல்கள் வெளி வரவில்லை. அவ்வாறு அறிவித்துக் கட்டணத்தை உயர்த் துவதே நல்ல தீர்வு. ஆனாலும் மீற்றர் வண்டிகள் குறை ந்த யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிச் சாரதிகளின் காட்டில் மழையாகவே இருக்கிறது. தாம் நினைத்த அளவில் கட்டணங்களை அறவிடுகிறார்கள்.

---

# ஹேக்கிங் கல்வி பயில்வது எப்படி?



ஹரி

ஹேக்கிங்: களவா? கல்வியா? பாகம் ஒன்றில் ஹேக்கிங் என்றால் என்ன, ஹேக்கர்கள் யார், அவர்கள் செயல்படும் விதம், வகைகள் பார்த்தோம். இப்பகுதியில் நேர்மையான ஹேக்கிங் கற்பது எப்படி, எங்கிருந்து தொடங்குவது என்பது குறித்துக் காண்போம்.

ஹேக்கிங் ஒரு சுவாரசியமான கலை. கற்றுக்கொள்வ தற்கு வயதோ, கல்விப் பின்புலமோ, மொழிப்புலமையோ, நிதி நிலையோ ஒரு தடையல்ல! எந்த வயதிலும் கற்க லாம், யாவரும் கற்கலாம். இதன் மீதான ஆர்வமே முக்கியம். அதுவே முதலீடு. வேலைவாய்ப்புகளுக்கும் இது பொருந்தும். அது எப்படி? ஹேக்கிங் கற்றுக்கொண்ட ஓர் இளைஞனுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் 50 வயதை நெருங்கியவருக்கும் கிடைக்குமா என்றால், நிச்சயம் கிடைக்கும். தொடர்ந்து வாசியுங்கள்.

இதில் ஆர்வம் எனக் குறிப்பிடுவது கணினி, நிர லாக்க மொழிகள், இயங்குதளங்கள், நெட்வொர்க்கிங் மற்றும் தொடர்ந்த முயற்சிக்கான ஈடுபாடும், பொறு மையும்தான். அதுபோலவே ஹேக்கிங் என்பது ஒரு முறைக் கல்வி அல்ல. ஒவ்வொரு நொடியும் வளர்ந்து கொண்டிருக்கும் தொழில்நுட்பம், ஆகவே தினசரிக் கற்றல் மட்டுமே இத்துறையில் நம்மை நீடிக்க வைக் கும். கற்றுக்கொள்வதற்கு எந்த நாளும் தயங்கவேகூடாது. கற்றுக்கொள்வதை ஒரு நாள் நிறுத்தினாலும் நாம் பழையதாகிவிடுவோம். தொழில்நுட்பத்தில் பழமைக்கு வேலையில்லை.

ஹேக்கிங் கற்றுக்கொள்வதற்கான அடிப்படை, கணினி நெட்வொர்க்கிங்கில் இருந்து தொடங்குகிறது. கணினிகள் எப்படி தங்களுக்குள் மற்றும் பிரிண்டர், சர்வர் போன்ற பிற சாதனங்களுடன் தொடர்புகொள்கின்றன. இணையக் கடலில் நீந்தும்போது ஒவ்வொரு கணினிக்கும் கொடுக் கப்படும் ஐ.பி. முகவரி என்பது என்ன, அதன் இரு வகை கள், ஹோஸ்ட் பெயர், மேக் (MAC) முகவரி, ஒவ் வொரு கணினியும் தனக்கு வரும் / செல்லும் தகவல்களை எப்படி தங்களிடம் இருக்கும் 1 முதல் 65535 வாசல்கள் (port) வழியாக அனுப்புகிறது / பெறுகிறது.

அதற்கு முன்பாக அத்தகவல்கள் 'ஓபன் சிஸ்டம்ஸ் இன்டர்கனெக்ஷன்' (OSI) இணைப்பின் 7 அடுக்குகளான இயற்பியல் (Physical), தரவு இணைப்பு (Data) , தொட ர்பு (Network), போக்குவரத்து (Transportation), அம ர்வு (Session) விளக்கக் காட்சி (Presentation), பயன் பாட்டுத்தளம் (Application) ஆகிய அடுக்குகள் வழியாக எப்படி தனது தகவல் பரிமாற்றப் பயணத்தை நிகழ்த்து கிறது.

தவிர ஒரு கணினி இன்னொன்றுடன் மட்டுமே தொடர் புகொள்ளும் நேர்வழித் தொடர்பு, இல்லை ஒரு கணினி கிளைகள்போல பல சாதனங்களுடன் தொடர்புகொள்ளும் மர வடிவத் தொடர்பு, நட்சத்திர வடிவத் தொடர்பு, வலை வடிவத் தொடர்பு எனப் பல விதமான தொடர்புக் கட்டமைப்புகளையும் (Network Topology), 7 வகை

யான நெட்வொர்க்கிங் வகைகளையும் இதில் தெரிந்து கொள்ளலாம்.

கணினித் தொழில்நுட்பத்தில் நெட்வொர்க்கிங் அறிவு மிக முக்கியமான ஒன்று, இதை நன்கு தெரிந்துகொண்டால்தான் ஹேக்கிங்கின் முதல் நிலையான தொடர்பை வெற்றிகரமாக நிறுவ முடியும்.

கணினி அறிவு - கணினியில் உள்ள வன்பொருள், மென்பொருள், அதன் உருவாக்கம், இயங்கும்விதம் குறித்து தெரிந்துகொள்ளவேண்டும்.

இயங்குதள அறிவு - கணினியின் உயிர் அதன் இயங்குதளம். இத்தொழில்நுட்பத்தில் பெரும்பான்மையாக நான்கு வகை இயங்குதளங்கள் உள்ளன. மைக்ரோசாஃப்டின்



விண்டோஸ் (Windows), ஆப்பிளின் மேக்ஓஎஸ் (macOS), ஆன்ட்ராய்ட் (android) மற்றும் லினக்ஸ் (Linux) இதில் ஹேக்கிங்கிற்கு நீங்கள் கற்க வேண்டியது லினக்ஸ் இயங்குதளம். குறிப்பாக, காலி லினெக்ஸ் (Kali Linux) தான் ஹேரிபோட்டர் கதைகளில் வைத்திருக்கும் மந்திரக் குச்சிபோல, அதை எவ்வளவு கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவு மாயங்கள் ஹேக்கிங்கில் நிகழ்த்தலாம்.

சரி! மற்ற இயங்குதளங்களை விடுத்து ஹேக்கர்கள் ஏன் லினக்ஸைத் தேர்ந்தெடுக்கிறார்கள்? இது ஒரு திறந்த மூல இயங்குதளம் (Open Source). நாம் விரும்பும் வகையில் வடிவமைத்துக்கொள்ளலாம், தாக்குதலுக்கான இலக்கை ஸ்கேன் செய்வது முதல் இலக்கைப் பிளப்பது வரை அனைத்திற்குமான தனியான சோதனை செயலிகள் இதில் இருக்கின்றன, இது கணினியில் இயங்குவதற்கான வன்பொருள் தேவை குறைவே. 2 ஜிபி ரேமில்கூட சுணங்காமல் இயங்கும். ஸ்மார்ட்போன்களிலும் நிறுவிக்கொள்ளலாம். இருக்கும் அனைத்திலும் பாதுகாப்பான இயங்குதளம் லினக்ஸ்தான். மேலும் இது யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளும் திறந்த இயங்குதளம் என்பதால், இதைத் தொடர்ந்து சோதித்து இதன் பலவீனங்களை சரி செய்வதற்காகவே ஒரு பயன்பாட்டாளர் குழு தொடர்ந்து இயங்குகிறது.

சரி! லினக்ஸ் கற்றுக்கொள்வதெற்கென ஒரு தனிக் கணினி வாங்க வேண்டுமா?

தேவையில்லை! ஏற்கனவே உங்களிடம் இருக்கும் விண்டோஸ் இயக்கக் கணினிகளில்கூட 'மெய்நிகர் இயந்திரம்' (Virtual Machine) பயன்படுத்தி லினக்ஸை நிறுவிக் கொள்ளலாம், இரண்டுமே அட்சரமாய் இயங்கும்.

அடுத்து நிரலாக்க மொழிகளான சி++, ஜாவா, பைதான், எஸ்க்யூஎல் (SQL), பிஹெச்பி (PHP) குறித்தும் அறிந்து கொள்ளவேண்டும். இது தெரிந்தே ஆக வேண்டும் என்பது விதியல்ல. இது தெரிந்திருந்தால் இதன் பலவீனங்களைப் பயன்படுத்தி உள்நுழைதலை கொஞ்சம் இலகுவாக செய்யலாம். ஆகவே, இதனுடன் க்ரிப்டோகிராஃபி எனப்படும் மறைநுட்பம், பின்னோக்குப் பொறியியல் (Reverse Engineering) இதையும் தெரிந்து வைத்திருப்பது நலம்.

இவை அனைத்தும் தெரிந்திருந்தாலும் பொறுமையையும், சட்டத்திற்குப் புறம்பான வேளைகளில் ஈடுபடாத தார்மிகச் சிந்தனையும் அவசியம். காரணம், இன்றைய நாளில் தங்கத்தைவிட மிகவும் விலையுயர்த்தது தகவல். ஹேக்கர்கள் உலவப்போவது தகவல் களஞ்சியத்தில், ஆகவே மிக கவனமாகச் செயல்படுவது நலம்.

சரி! மேற்குறிப்பிட்டுள்ள கற்றலை எங்கிருந்து தொடங்குவது? மாணவர்கள் வாய்ப்பிருந்தால் கல்லூரிகளில் இருந்து தொடங்கலாம். ஆனால், அதிலும் கவனமாக இருக்கவேண்டும். பத்து வருடங்களுக்கு முன்பு எப்படி பொறியியல் கல்வி அவசரகதியில் வணிகம் செய்யப்பட்டதோ அதுபோல இன்று திரும்பிய பக்கமெல்லாம் ஹேக்கிங் மற்றும் சைபர் பாதுகாப்பு குறித்த படிப்புகள். ஆனால், இதில் மிகச் சிலதான் தரமான ஆசிரியர்களைக் கொண்டு செயல்படுகின்றன. காரணம், ஹேக் கிங் சொல்லித்தரும் ஆசிரியர் முதலில் ஹேக்கராக இருந்திருக்கவேண்டும், அப்படியிருந்தால் மட்டும் அது பயனுள்ள கல்வியாக அமையும்.

**பிறகு எப்படி கற்பது?**

அனைவருக்கும் பொதுவான ஒரே வழி, இணையம் தான். இங்கு அறிவு இலவசம், சுய கற்றல், நண்பர்களுடன் இணைந்து கற்றல் எனப் பலவாறு ஹேக்கிங் திறமையை மெருகேற்றலாம். இதற்கென பல்வேறு குழுமங்கள், யுட்யூப் சானல்கள், இலவச புத்தகங்கள், இணையதளங்கள் இயங்குகின்றன, உண்மையில் கல்லூரிகள்கூட இத்தளங்களின் விபரங்களைக் கொண்டே தங்கள் பாடத்திட்ட பயிற்சிமுறைகளை வடிவமைக்கிறார்கள்.

அதுபோன்ற ஒரு உயர்தர ஹேக்கிங் மற்றும் நெட் வொர்க்கிங் கற்றலை இலவசமாக வழங்கும் பயிற்சித் தளங்கள் மற்றும், புத்தகங்களின் இணைப்புகள்:

www.hackthebox.com
https://cohackers.co/
https://tryhackme.com/
http://www.securitytube.net/
https://www.geeksforgeeks.org/computer-network-tutorials/
https://www.pdfdrive.com/hacking-books.html
https://www.pdfdrive.com/networking-books.html

நேர்மையான ஹேக்கிங் குறித்த பத்து மணிநேரப் பயிற்சிக் காணொளியை இதில் காணலாம்.

https://www.youtube.com/watch?v=dz7Ntp7KQGA

# ஏன்...? அப்படி...?



# தென்னைகளின் மேற்பட்டையில் வெட்டு

நட்சத்திரா

26

நிலத்திலிருந்து குறிப்பிட்டளவு உயரத்தில் தென்னை மரங்களின் மேற்பட்டை வட்ட வடிவில் நீக்கப்பட்டிருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். தரையிலிருந்து கிட்டத்தட்ட 5 தொடக்கம் 6 அடிகள் வரையான உயரத்தில் தென்னை மரங்களைச் சுற்றிப் பட்டை நீக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருந்தாலும் ஏன் அப்படி நீக்கப்பட்டிருக்கிறது என்று நாம் சிந்திப்பதில்லை.

அது ஏன்...? என்ன காரணத்தால் அவ்வாறு செய்கிறார்கள்...? அவ்வாறு செய்வதால் ஏற்படும் நன்மை, தீமைகள் என்ன? என்றெல்லாம் இந்தப் பகுதியில் பார்ப்போம்.

மரங்களின் மேற்புறத் தோல்பட்டைப் பகுதியை மேற்பட்டை என்பார்கள். அதுவே தாவரங்களுக்குரிய உணவைக் கடத்தும் பகுதி. இந்தப் பகுதியை உரியம் என்கிறார்கள். நடுவிலுள்ள தண்டுப் பகுதியால் நீர், கனியுப்புகள் கடத்தப்படுகின்றன. இதனால்தான் தாவரம் உயிர்வாழ்கிறது. இத்தகைய நிலையில் ஒரு வித்திலைத் தாவரமான தென்னைக்கும் அப்படித்தான்.

மேற்புறப் பட்டைப் பகுதி வழியாக உணவு கடத்தப்படுகிறது. உரியம் என்கிற இந்தப் பட்டைப் பகுதியை மென் உரியம், வன் உரியம் என இரண்டாக்கி நோக்குகிறார்கள். இதில் மேற்புறத் தில் இருப்பது வன் உரியம், அதனுள்ளாக மென் உரியம் அமைந்திருக்கும். தென்னைகளில் நீக்கப்படுவது இந்த வன் உரியம் ஆகும். அதை நீக்குவதற்குக் காரணம்..., தென்னை மரங்களைத் தாக்கும் நோய்களில் இருந்து அவற்றைப் பாதுகாத்துக்கொள்வதற்காகும்.

தென்னைகள் அதிகம் வளர்க்கப்படுகின்ற பகுதிகளில் அவற் றைத் தாக்கும் வண்டுகள், பூச்சியினங்கள், நோய்க்காரணிகள் அதிகம் பரவியிருக்கும். சிறிய தென்னைகளை மாத்திரமன்றிப் பெரிய தென்னைகளையும் இந்த வண்டுகள், நோய்கள் தாக்குகின்றன. அவை பெரும்பாலும் தென்னைகளின் மேற்புறத் தோல்பகுதிக்குள் புகுந்து அவற்றின் சாற்றை உணவாக்குகின்றன. இதனால் தென்னைக்குத் தேவையான உணவு தடைப்படுகிறது. உரியம் எனப்படுகின்ற மேற்பட்டைக்குள் புகுந்தே அவை உயிர்வாழ்வதுடன் அவ்வழியாகக் கடத்தப்படுகின்ற உணவையும் தடைசெய்கின்றன.

அதுமட்டுமன்றி மேற்பட்டை வழியாகக் கீழிருந்து மேல் நோக்கிப் பரவிச்சென்று முழு மரத்தையும் பட்டுப்போகச் செய்கின்றன. மேற்பட்டை வழியாக மென்மேலும் மேலே அவை பரவுவதைத் தவிர்ப்பதற்காகவே தென்னை மரங்களின் மேற்பட்டையை நீக்குகிறார்கள். அத்தோடு கீழ்ப் பகுதியில் பரவுகின்ற அவற்றுக்கு மருந்திட்டுக் கட்டுப்படுத்துகிறார்கள். இதனாலேயே தென்னைகளின் மேற்பட்டையை நீக்குகிறார்கள். இது குறித்து ஏன் அப்படி என்று நீங்களும் மேலும் தேடியறியலாம்...!

# கண்டறியாத கதைகள்

06

யசோ மாமி



## சிறுவர்

வணக்கம் மருமக்களே!

எல்லோரும் என்ன செய்கிறீர்கள்? எப்படிப் படிக்கிறீர்கள்? பள்ளிப் படிப்பைத் தவிர வேறு என்ன விடயங்களில் உங்களுக்கு ஆர்வம் அதிகம்?

விளையாட்டு, சங்கீதம், நடனம், இசைக்கருவிகள் வாசித்தல் இப்படியாக பல விடயங்கள் உங்களுக்குப் பிடித்தவையாக இருக்கக்கூடும். சிலருக்கு நீச்சலடிக்கப் பெரிதும் விருப்பமாக இருக்கும். சிலருக்குச் சில விடயங்களைச் செய்ய விருப்பமாக இருந்தாலும் செய்யமுடியாத சூழல் இருக்கும். அதனாலென்ன, பறவாயில்லை. எல்லாருக்கும் வசதிகள் ஒரே மாதிரியாக அமைவதில்லைத்தானே. அதனால் அதையிட்டுக் கவலை கொள்ளத் தேவையில்லை. நீங்கள் படித்து வளர்ந்து பெரிய பிள்ளைகள் ஆன பிறகு உங்களுக்குப் பிடித்தவற்றை நீங்களே செய்து கொள்ளலாம்.

இன்றைக்கு நான் உங்களுக்கு செலவேதும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய பயனுள்ள பொழுதுபோக்கு ஒன்று பற்றிய விடயத்தை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அது என்னவென்றால் புத்தகங்கள் படிப்பது ஆகும். பாடப் புத்தகங்களைத் தவிர வேறூ பலவிதமான புத்தகங்கள் உள்ளன. அவை உங்களைப் புதுப்புது அனுபவங்களுக்குள்ளும் புதுப்புது உலகங்களுக்குள்ளும் கொண்டு செல்ல வல்லவை.

உங்கள் வீட்டுக்கு அருகாமையில் இருக்கிற நூலகத்துக்குச் சென்று உங்களைப் பதிவு செய்து கொண்டால் அங்கு உங்களுக்கு விருப்பமான புத்தகங்களை நீங்கள் இலவசமாக இரவல் பெற்றுச் சென்று படித்தபின் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறொரு புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். நூலகங்களில் குழந்தைகளுக்கென்றும் மாணவர்களுக்கென்றும் வளர்ந்தவர்களுக்கென்றும் பல்வேறு விதமான புத்தகங்கள் இருக்கின்றன.

அடுத்தமுறை நகரசபைகளினால் நிர்வகிக்கப் படும் அத்தகைய நூல் நிலையம் ஒன்றுக்குச் சென்று வந்த அனுபவம் ஒன்றைப் பற்றி அல்லது அங்கு நீங்கள் எடுத்து வந்த புத்தகம் ஒன்று பற்றி அல்லது படித்துப் பிடித்துப்போன ஒரு புத்தகம் ஒன்று பற்றி அடுத்த முறை எனக்குச் சொல்கிறீர்களா? அதனை நீங்கள் எங்களுக்கு076389858 இந்த வட்ஸ்அப் இலக்கத்துக்கு உங்கள் பெற்றாரின் உதவியைப் பெற்று அனுப்பி வைத்தால் அதனை நாங்கள் இங்கு பிரசுரம் செய்வோம்.

அவுஸ்திரேலியிவிலும் பல்வேறு விதமான நூல்நிலையங்கள் இயங்குகின்றன. அங்கு புத்தகங்களை மட்டுமன்றி குழந்தைகளுக்கான பொம்மைகளை இரவல் பெற்றுக் கொள்ளலாம், வீடியோக்கள், பாடல் ஒலித்தட்டுக்கள் போன்றவற்றையும் ஒலிப்புத்தகங்களையும் இரவல் பெறலாம். இணையவசதிகளையும் போட்டோ கொப்பி வசதிகளையும் பயன் படுத்தலாம்.

அதனோடு கூடவே 4 வயது வரையான வீட்டிலிருக்கும் குழந்தைகளுக்கு வாரம் ஒருதடவை புத்தகம் வாசித்து கதை பாட்டு என்பன சொல்லிக்கொடுக்கும் நிகழ்ச்சி நடக்கும். வயதானவர்களுக்கு கைவினைப் பொருட்கள் சொல்லிக்கொடுக்கும் நிகழ்ச்சிகள் நடக்கும்.



நூலகங்களில் இருக்கிற மண்டபங்களை நாம் குறைந்த செலவில் வாடகைக்கு எடுத்து நாங்கள் நிகழ்ச்சிகள் நடத்தலாம்.

இங்குள்ள நகரசபை நூலகங்களில் தமிழ் மொழியிலான புத்தகங்களையும் சஞ்சிகைகளையும்கூட இரவல் பெற்றுக் கொள்ளலாம் என்றால் பாருங்களேன்! அது மாதிரி சீன மொழி, அரபு மொழி, ஹிந்தி போன்ற வேறு மொழி நூல்களையும் நாம் இரவல் பெற்றுக்கொள்ளலாம். நமக்கு ஒரு குறிப்பிட்ட நூல் தேவைப்படும் பட்சத்தில் அந்நூல் அந்தக் குறிப்பிட்ட நூலகத்தில் இல்லை என்றால் அது தம்மிடம் இருக்கும் வேறு நூலகங்களில் இருக்கிறதா என்று ஆராய்ந்து வேறொரு நூலகத்தில்

அது இருக்கிறது என்றால் அதனை அவர்கள் நமக்கு தபால் வழியாக நம் வீட்டுக்கே அனுப்பி வைக்க வழி செய்வார்கள்.




அவுஸ்திரேலியாவில் இவற்றோடு கூடவே இன்னொருவிதமான நூலகம் ஒன்று உண்டு. அதன் பெயர் 'வீதிநூலகம்'. Street library என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் அதனை நகரசபைகள் நிர்வகிக்கின்றன. யார் வேண்டுமானாலும் இந்த வீதி நூலகங்களை இலவசமாகப் பாவிக்கலாம். யார் வேண்டுமானாலும் வீதி நூலகத்தை உருவாக்கலாம்.

உதாரணமாக எனக்கு ஒரு வீதி நூலகத்தை உருவாக்க விருப்பம் இருந்தால் நான் அதனை என் வீடு அமைந்திருக்கிற நகரசபைக்கு அறிவிக்கவேண்டும். அவர்கள் என் வீட்டு முன் பகுதியில் பொருத்தத்தக்க ஒரு குட்டி நூல்கள் வைக்கத் தக்க பெட்டியை எனக்கு இலவசமாகத் தருவார்கள். வீட்டுக்கு முன்னால் நாம் தபால் பெட்டி வைத்திருப்போம் அல்லவா? அது மாதிரியான சிறு பெட்டியாக இருக்கும் அதனை வீதியின் ஓரமாக நாட்டி அதற்குள் என்னிடமுள்ள படித்த எனக்கு இனி தேவைப்படாது என நினைக்கிற அதேநேரம் மற்றவர்களுக்கு அது பயன்படும் என்று கருதுகிற புத்தகங்களை அதற்குள் வைத்து விடவேண்டும். புத்தகம் படிக்க விரும்புகிறவர்கள் இலவசமாக அந்தப்புத்தகத்தை எடுத்தைச் சென்று படிக்கலாம். விரும்பினால் தானே அதனை வைத்தும் கொள்ளலாம். இல்லை என்றால் அந்தப் புத்தகத்துக்குப் பதிலாக வேறொரு புத்தகத்தை அந்த பெட்டிக்குள் வைத்து விடலாம். வீதியால் போகும் வேறொருவர் அதிலிருக்கும் வேறொரு புத்தகத்தை எடுத்துவிட்டு தன்னிடமுள்ள வேறொரு புத்தகத்தை அதற்குள் வைக்கலாம்.

இவ்வாறாகப் புத்தகங்கள் இலவசமாக நடமாடிக் கொண்டிருக்கும். இதனை Street library என்று அழைக்கிறார்கள். அவைகள் வீடுகளின் வீதியருகிலும் மக்கள் கூடும் பூங்காக்களிலும் பொதுவாகக் காணக் கிடைக்கும்.

நான் வாழும் இடத்துக்கருகில் இருக்கும் ஒரு Street library ஐ தான் படத்தில் காண்கிறீர்கள்.

இதனை யார் வேண்டுமானாலும் நகரசபையின் அனுமதியோடும் ஆதரவோடும் செய்யலாம். படித்த ஒரு புத்தகம் பலருக்கும் பயன் படும் விதமாக இருக்க இவ்வாறான நூலகங்கள் உதவுகின்றன. மேலும் புத்தகங்கள் வைக்கும் இவ்வாறான




நூலகக் கூடுகள் நகரசபையில் தீர்ந்து விடும் பட்சத்தில் வார இறுதிகளில் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி கழிவுப் பொருட்களைக்




கொண்டு அப் பெட்டிகளை இணக்கும் பயிற்சியை தேர்ந்த விற்பன்னரைக் கொண்டு அங்கத்தவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து எமக்குப் பிடித்த மாதிரியான வடிவங்களில் இலவச மூலப் பொருட்களைக் கொண்டு நாமே செய்து கொள்ள பயிற்சியையும் நகரசபைகள் வழங்குகின்றன.

அதன்வழி பயில்பவர்கள் புதிதாக ஒரு திறமையைக் கற்றுக் கொள்வதோடு தமக்குத் தேவையான புத்தக பெட்டியையும் இலவசமாக தாமே தமக்குப் பிடித்த வடிவமைப்பில் செய்து கொள்ளுகிறார்கள். அதன்படி மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருகுகிறது. தம்மைப் போன்ற ஏனைய மக்களைக் கண்டு கலந்துறவாட ஒரு சந்தர்ப்பமும் கிடைக்கிறது.

ஒரு கல்லில் எத்தனை மாங்காய்கள் பறிக்க முடிகிறது இல்லையா?



# காது வலிக்கு என்ன காரணம்?

கு.கணேசன்

'செல்வத்துள் செல்வம் செவிசெல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' என்று திருவள்ளுவரே வியந்து பாராட்டிய காது, ஐம்புலன்களில் முக்கியமானது. ஒலியைக் கேட்பதற்கு மட்டுமல்ல... நாம் நேராக நிற்கவும், தள்ளாடாமல் நடக்கவும்கூட காதின் பங்களிப்பு மிகவும் அவசியம். கேட்கும் திறனுக்கும் பேச்சுத் திறனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குழந்தைக்கு காது கேட்கத் தொடங்கினால்தான், அது பேசத் தொடங்கும். இல்லையென்றால் அதற்குப் பேச்சும் வராது.

நடைமுறையில் கண்ணுக்கும் பல்லுக்கும் பிரச்சினை ஏற்பட்டால், உடனடியாக நாம் மருத்துவரைப் பார்க்கிறோம். காதுக்கு ஒரு பிரச்சினை என்றால், அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் அலட்சியமாக விட்டு விடுகிறோம். இருட்டோ, வெளிச்சமோ எதன் பொருட்டும் கவலைப்படாமல் காது தன் வேலையைச் செய்துகொண்டிருப்பதால்தான் அதன் முக்கியத்துவத்தை உணராமல் இருக்கிறோம். கொஞ்ச நேரத்துக்குக் காதை அடைத்துக் கொண்டிருங்கள். அப்போதுதான் அதன் மகத்துவம் புரியும்.

**காது கேட்பது எப்படி?**

காதில் வெளிக்காது, நடுக்காது, உள்காது என்று மூன்று பகுதிகள் உள்ளன. வெளிக்காது ஒலி அலைகளை உள்வாங்கி காதுக்குள் கொண்டுசெல்கிறது. நடுக் காதில் உள்ள செவிப்பறை அந்த ஒலி அலைகளை ஏற்றுக்கொள்ளும்போது அதிர்கிறது. இந்த அதிர்வுகள் செவிப்பறையை ஒட்டியுள்ள சுத்தி, பட்டடை, அங்கவடி எனும் மூன்று எலும்புகள் மூலம் உள்காதுக்குள் நுழைந்து, அங்கு நத்தை வடிவில் உள்ள 'காக்ளியா'வை (Cochlea) வந்தடைகின்றன.

அங்கு பெரிலிம்ப் (Perilymph), எண்டோலிம்ப் (Endolymph) என்று இரு வகைத் திரவங்கள் உள்ளன. இதில் எண்டோலிம்ப் திரவத்தின் மீது நடுக்காதின் அங்கவடி எலும்பு பிஸ்டன் போல் இயங்குவதால், இங்கேயும் அதிர்வுகள் உண்டாகின்றன. அப்போது இந்தத் திரவங்களில் மிதந்துகொண்டிருக்கும் இழை அணுக்கள் (Hair cells) தூண்டப்படுகின்றன. உடனே, அங்கு மின்னலைகள் உருவாகி, செவி நரம்பு வழியாக மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. பிறகுதான், நாம் கேட்பது பேச்சா, பாட்டா, சத்தமா, இசையா என்று வகை பிரித்துச் சொல்கிறது, மூளை.

**உடலை சமன் செய்யும் காது!**

உள்காதில், கேட்கும் திறனைத் தருகின்ற காக்ளியாவோடு உடலைச் சமநிலைப்படுத்துகின்ற லேப்ரிந்த் (Labyrinth) என்னும் பாகமும் உள்ளது. லேப்ரிந்தின் ஒரு பக்கத்தில் காக்ளியாவும், இன்னொரு பக்கத்தில் அரைவட்டக் குழல்களும் (Semicircular canals) இருக்கின்றன. இவற்றுக்குக் கீழே யுட்ரிக்கிள் (Utricle), சாக்யுல் (Saccule) என்று இரண்டு அறைகள் உள்ளன. லேப்ரிந்த் என்பது எலும்பு லேப்ரிந்த், படல லேபரிந்த் என்று இரண்டு விதமாக இருக்கிறது. மேலும் கீழும் உள்ள எலும்பு லேப்ரிந்தில் பெரிலிம்ப் திரவமும், நடுவில் உள்ள படல லேப்ரிந்தில் எண்டோலிம்ப் திரவமும் உள்ளன, யுட்ரிக்கிள், சாக்யுல் மற்றும் அரைவட்டக்குழல்களில் பெரிலிம்ப் திரவம் உள்ளது.

இவற்றிலும் இழை அணுக்கள் இருக்கின்றன. நாம் நடக்கும்போது, எழுந்திருக்கும்போது, ஓடும்போது, தலையைத் திருப்பும்போது படல லேப்ரிந்தில் உள்ள எண்டோலிம்ப் திரவம் அசைகிறது. இந்த அசைவின் வேகம், விகிதம், திசை, பரப்பு இவற்றைக் கொண்டு அரைவட்டக்குழல்களில் வெவ்வேறு குறியீடுகள் உண்டாகும். இவற்றை இழை அணுக்கள் கிரகித்து செவி நரம்பின் வழியாக மூளைக்கு எடுத்துச் செல்லும். இந்தத் தகவல்களைக் கொண்டு நாம் நிற்கிறோமா, நடக்கிறோமா, தலையைத் திருப்புகிறோமா என்று நம் மூளை தெரிந்து கொள்ளும். அதற்கேற்ப மூளை செயல்பட்டு உடல் தசைகளுக்கு ஆணை பிறப்பித்து உடலைச் சமநிலைப்படுத்தும்.

**காது வலிக்குக் காரணம்!**

காது நோய்களில் முக்கியமானது, காது வலி. காதில் கொப்பளம் தோன்றுவது, காதில் சீழ் வடிவது, அழுக்கு அல்லது அந்நியப் பொருள்கள் அடைத்துக்கொள்வது, எறும்பு போன்ற பூச்சி புகுவது, காதில் அடிபடுவது போன்றவற்றால் காது வலி வரும். மூக்கில் சளி பிடிப்பது, மூக்கு ஒழுகுவது, தடுமம் போன்ற மூக்குப் பிரச்சினைகளால்கூட காதுவலி வருகிறது. தொண்டையில் சளி பிடித்து புண் உண்டாவது, டான்சில் வீங்குவது போன்றவையும் காதுவலியை வரவேற்கும். காது வலிக்கான காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றால் குணமாகும்.

**காதில் சீழ் வடிந்தால்?**


காதில் சீழ் வடிவதற்கு முக்கியக் காரணம், ஜலதோஷம்தான். இதன் தொடக்கத்தில், மூக்கில் தண்ணீர் மாதிரி சளி கொட்டும். தும்மல் வரும். இதைக் கவனிக்கத் தவறினால், மூக்கிலிருந்து மஞ்சள் நிறத்தில் சளி கட்டியாக வரும். இப்போதாவது இதற்குச் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லையென்றால், இந்தச் சளியில் உள்ள கிருமிகள், தொண்டையையும் நடுக்காதையும் இணைக்கின்ற 'ஈஸ்டாக்கியன் குழல்' (Eustachian tube) வழியாக நடுக்காதுக்குச் சென்று, சீழ் வைக்கும். பிறகு அங்குள்ள செவிப்பறையைத் துளைத்துக்கொண்டு வெளிக்காது வழியாக சீழ் வெளியேறும். காதில் சீழ் வடிந்தால், கண்டிப்பாக அது கேட்கும் திறனைப் பாதிக்கும். ஆகவே, இதற்கு தொடக்க நிலையிலேயே மருத்துவச் சிகிச்சை பெற்றுவிடவேண்டும். காலம் கடத்தினால், 'டிம்பனாஸ்டமி' (Tympanostomy) எனும் அறுவைச் சிகிச்சை தேவைப்படும்.

**காதில் குரும்பி சேர்ந்தால்?**

காதுகள் சரியாகக் கேட்க வேண்டுமானால், செவிப்பறை சீராக இருக்க வேண்டும். இதற்கு இயற்கை நமக்குத் தந்துள்ள பாதுகாப்பு வளையம்தான், காதுக் குரும்பி (Ear wax). காதுக்குள் 'செருமோனியஸ்' சுரப்பிகள் (Ceremonious glands) உள்ளன. இவைதான் காதுக்குள் ஒருவித திரவத்தைச் சுரந்து, குரும்பியாக மாறி, செவிப்பறையைப் பாதுகாக்கின்றன. காதுக்குள் நுழையும் பூச்சிகள், அழுக்குகள், அந்நியப் பொருள்கள் போன்றவை செவிப்பறையைப் பாதித்துவிடாதபடி தடுப்பது, இந்தக் குரும்பிதான். இதை அகற்ற வேண்டிய அவசியமில்லை. தானாகவே மெள்ள மெள்ள ஊர்ந்து வெளியில் வந்துவிடும்.

**குரும்பியை அகற்றுவது எப்படி?**

குரும்பியை அகற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுமானால், மூன்று வழிகளில் அதை அகற்றலாம். நம் கண்ணுக்கு எளிதில் தெரியும்படி உருண்டையாகத் திரண்டிருக்கும் குரும்பியை ஊக்கு கொண்டு அகற்றிவிடலாம். சிலருக்குக் காதின் உள்புறமாக குரும்பி ஒட்டிக்கொண்டிருக்கும். இவர்களின் காதில் இதற்கென உள்ள காது சொட்டு மருந்து அல்லது தேங்காய் எண்ணெய் சில சொட்டுகள் சில நாட்களுக்கு விட்டால், குரும்பி அதில் ஊறி, தானாகவே வெளியில் வந்துவிடும். என்றாலும், நாள்பட்ட குரும்பி இந்த வழியில் வராது. சிரிஞ்சு மூலம் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து அகற்ற வேண்டும். இதற்கு மருத்துவர்தான் உதவ வேண்டும்.



**காது குடைவது நல்லதா?**

காதுக்குள் ஏதாவது பிரச்சினை என்றால், உடனே நாம் கையில் எடுக்கும் பொருள் 'பட்ஸ்'தான். காதுக்குள் குரும்பி சேர்ந்தால் பட்ஸ் கொண்டு அதை எடுக்க முயல்கிறோம். இந்த முயற்சி, குரும்பியை இன்னும் கொஞ்சம் உள்ளே தள்ளிவிடுமே தவிர, வெளியில் கொண்டுவராது. மாறாக, செவிப்பறையைத் தாக்கிப் புண்ணாக்கிவிடும். ஆகவே, கையில் தொடக்கூடாத ஒரு பொருள் உண்டென்றால் அது 'பட்ஸ்'தான் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இன்னும் பலருக்குக் காது குடைவது ஒரு பழக்கமாகவே உள்ளது. ஊக்கு, ஹேர்பின், பேனா, பென்சில், தீக்குச்சி, சாவி என்று கையில் கிடைப்பதை எல்லாம் காதுக்குள் நுழைத்துக் குடைந்துகொண்டிருப்பார்கள். இந்தப் பழக்கம் நீடித்தால், செவிப்பறை பழுதடைந்து, பின்னொரு நாளில் காது கேட்காமல் போகும்.

> **பலருக்குக் காது குடை வது ஒரு பழக்கமாகவே உள்ளது. ஊக்கு, ஹேர்பின், பேனா, பென்சில், தீக்குச்சி, சாவி என்று கையில் கிடைப்பதை எல்லாம் காதுக்குள் நுழைத்துக் குடைந்துகொண்டிருப்பார்கள். இந்தப் பழக்கம் நீடித்தால், செவிப்பறை பழுதடைந்து, பின்னொரு நாளில் காது கேட்காமல் போகும்**

**காதுக்குள் அந்நியப் பொருள் நுழைந்துவிட்டால்?**

காதுக்குள் புகுந்த பொருள் கண்ணுக்குத் தெரிந்தால், தலையைச் சாய்த்துப் பொருளைக் கீழே விழ வைக்கலாம் அல்லது மருத்துவரிடம் காண்பித்து அதற்கென உரிய கருவியால் வெளியில் எடுப்பதே நல்லது. காதில் எறும்பு போன்ற பூச்சி புகுந்திருந்தால், தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய்யைச் சில சொட்டுகள் விட்டால், பூச்சி அதில் இறந்துவிடும்.

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

68



என் மீதான எனது ஐயம் பிறர் மீதான எனது ஐயம் என எல்லாமே ஒருபுறமாக இருக்க உண்மையில் ஐயம் கொண்டு தெளிவடைய வேண்டிய ஏராளம் விடயங்களை தவிர்த்து வருகிறோம் என்பது மறுபுறமான உண்மையாக இருக்கிறது. ஆரோக்கியமான ஐயம் என்பது அனேகமாகக் கவனிக்கப்படாத ஒன்றாகவே எம்முள் இருக்கிறது என்பது முக்கிய கவனத்திற்குரிய ஒன்று.

ஆரோக்கியமான ஐயம் என்றொன்று உள்ளதா? அப்படியாயின் ஆரோக்கியமான ஐயத்தை எப்படிக் கண்டு பிடிப்பது என்கிற கேள்வி எழுகிறதா? இது ஆரோக்கியமானதா? இல்லையா? இதுகூட ஒருவித ஐயம்தானே? ஐயப்படுவது சரியானதா தவறானதா? இங்கே ஒரு விடயம் எப்படியிருக்கும் என்கிற அவாவும் ஒரு காரணமாகலாம். எப்படியிருக்கும் என்கிற வினா ஐயத்தினது வெளிப்பாடுதான் என்பது கவனத்திற்குரியது.

கனிந்த பழம் ஏன் மேலே செல்லவில்லை என்கிற ஐயம் நியூட்டனுக்கு எழாதிருந்திருந்தால் புவியீர்ப்பென்கிற ஒரு விடயம் எமக்குக் கிடைத்திருக்காது. அதேபோலவே ஞானிகளுக்கு எழுந்த ஐயங்கள்தான் கோட்பாடுகளாக எமக்குக் கிடைத்துள்ளன. ஐயங்களிற்காக விடைதேடிய உழைப்புத்தான் கண்டுபிடிப்புகளாகி எமது இயங்குதிறனை மேம்படுத்தியுள்ளது. அதற்காக ஐயமென்பது நன்மையாகவே அமைந்துவிடுகின்றன என அறுதியிட்டுச் சொல்லவும் முடியாது.

ஐயம் என்பது ஒரு அளவோடு நின்றுவிடவேண்டும் என்று கூறுவது இலகுவானதுதான். ஒரு அளவு என்பது எந்த அளவு என்பதுதான் இப்போதைய விடயம். முன்னரே பேசிக்கொண்டதைப்போல உண்ணும் உணவு ஆரோக்கியத்துக்கு உகந்ததுதானா என்கிற ஐயம் நல்லதுதான். அதனையே கழுவிய பொருட்களைத்தான் சமைப்பதற்கு பயன்படுத்தினரா? சமைத்தவனது சுகாதாரப் பழக்கங்கள் எப்படி? என்பதுபோல ஐயங்கள் எழுமாயின் உணவை உண்ண முடியுமா?

அதேபோல அவன் ஏன் எனக்கு உதவ முன்வருகிறான்? அந்த உதவிக்குப் பின்னால் ஏதேனும் எதிர்பார்ப்புகள் இருக்குமா? என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தால் பிறரிடத்தில் உதவிபெறமுடியுமா? பிறரது உதவியெதுவுமே பெறாது நாமாக இயங்க முடியாதென்பது யதார்த்தமானது. எம்முள் சிலரிடம் 'என்னிடம் எல்லாமே இருக்கிறதே? பிறரது தயவு (உதவி) தேவையே இல்லை' என்று பிறரிடமிருந்து ஒதுங்கியும் தாமாக அவர்களை ஒதுக்கியும் இருப்பது கண்கூடு.

'தனித்திருத்தல்' என்பது மிகமித் துன்பமானது. அதுவும் பிறரது தயவின்றி இயங்க முடியாத அல்லது தனித்து முடிவெடுக்க முடியாத ஒரு நிலையிலிருக்கும் போது மிகமிக கொடுமையானதும்கூட. இதனை சமூகத்தோடு (பிறரோடு சேர்ந்து) ஒத்தோடாத பலர் தமது இயலாமைக் காலத்தில் தனிமையில் வருந்துவதை எம் சூழலில் இயல்பாகவே காண்கிறோம். இதற்கான மூல காரணமாக அமைவது

பிறகு, சில சொட்டுகள் தண்ணீர் விட்டு, தலையைச் சாய்த்தால் பூச்சி வெளியில் வந்துவிடும். எந்தக் காரணத்தைக் கொண்டும் காய்ச்சிய எண்ணெயைக் காதுக்குள் ஊற்றாதீர்கள். அப்படிச் செய்தால், அது காதைப் பாதிக்கும்.

**காது சொட்டு மருந்து - கவனம்!**

காது வலி, காது அடைப்பு, காது இரைச்சல் என்று காதுப் பிரச்சினை எதுவானாலும் உடனே காதில் ஒரு சொட்டு மருந்தை ஊற்றிக்கொள்வது சிலருக்குப் பழக்கம். இதனால் அவர்களுக்கு ஆபத்துதான் வருமே ஒழிய காதுக்குப் பாதுகாப்பு ஏற்படுவதில்லை. நம் காது எப்போதுமே உலர்ந்த தன்மையுடன் இருக்க வேண்டிய உறுப்பு. அதில் அவசியமேயின்றி எண்ணெய், சொட்டு மருந்து என்று எதையாவது ஒன்றை ஊற்றி ஈரமாக வைத்திருந்தால், காற்றில் கலந்து வரும் பூஞ்சைக் கிருமிகள் (Fungal infection) அதில் உட்கார்ந்து கொள்ளும். அரிப்பை உண்டுபண்ணும். காது அடைத்த மாதிரி தோன்றும். காதுவலி, காதில் சீழ் வடிவது என்று பிரச்சினைகள் தொடரும். இறுதியில், காது கேட்பது குறையும். ஆகவே, தேவைப்பட்டால் மட்டுமே மருத்துவரின் ஆலோசனைப்படி காதில் சொட்டு மருந்து ஊற்றுங்கள். நீங்களாக எந்த மருந்தையும் காதுக்குள் ஊற்றாதீர்கள்.

இந்த ஐயம்தான்.
கூடஇருப்பவர் 'என்னைச் சுரண்டிவிடுவார், என்னைச் சிக்கலில் மாட்டிவிடுவார், எனது பணத்திற்காகவே என்னோடு உறவாடுகிறார், எனது புகழின் நிழலில் குளிர்காயவே வந்திருக்கிறார்கள்' போன்ற ஐயங்கள் பிறராகவே எம்மை அணுகினாலும்கூட எழுந்து அவர்களது உறவை ஒதுக்கி விடுகிறது. நாமாகவும் யாரையும் அணுகவும் மேற்கூறிய காரணங்களே தடுத்துவிடுகிறது. மொத்தத்தில் தனிச் சுவருள் நம்மை நாமே சிறை வைத்துவிடுகிறோம். அந்தச் சிறையே ஆயுள் முழுமையிலும்கூடவே இருந்து தனிமையைப் பரிசளிக்கிறது.

எண்ணங்களைப் பொத்தி வைக்க முடியாது. அவ்வாறு வைக்க முயலும்போது அவை எமது மனத்தை அழுத்தி உள நெருக்கீட்டைத் தோற்றுவித்து விடுகிறது. அது அடுத்தடுத்த கட்ட நேர் எண்ணங்களை முடக்கி எண்ணங்களை ஒரேயிடத்திலே முடக்கிவிடுகிறது. எண்ணங்கள் ஒரேயிடத்தில் சுழல்வது பற்றி ஏற்கனவே பேசியிருக்கிறோம். அதற்கான துணைக் காரணங்களில் முதன்மையானது இந்த ஐயம்தான். எண்ணங்கள் ஒரேயிடத்தில் முடங்குவதன் விளைவுகள் எப்போதுமே விரும்பத்தகுந்த விளைவுகளைத் தந்துவிடுவதில்லை என்பதும் யதார்த்தமானது.

ஐயமென்பதனது மறுபக்கமாக இவ்வாறான விபரீதமான ஐயங்கள் அமைந்து விடுகின்றன. 'ஐயம் தவிர்' என்பது ஆன்றோர் வாக்கு என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு நேர் ஐயமென்பது ஆரோக்கியமான விளைவுகளைத் தருமென்பது நினைவிலிருப்பது அவசியமானது. அதுதான் அடுத்து என்ன என்கிற எண்ணத்தின்வழி அடுத்த கட்டத்திற்கு எம்மை நகர்த்துகிறது. எனவே ஐயம் அவசியமாயும் இருக்கிறது. அநாவசியமாயும் இருக்கிறது.

எப்படி? அதுதான் ஐயத்தினது சிறப்பு. எப்படி? சிந்திப்போம்.

03

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் மீட்டிப் பார்க்க முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன்மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இவ்வாரச் சொல்

**புசத்துதல் அல்லது பிசத்துதல்**

"ஆள் முடியுற கட்டத்துக்கு வந்திட்டுதுபோல... வாய் பிசத்தத் தொடங்கிட்டுது" - அதாவது மூளை மாறாட்டம் ஏற்படுகின்ற நிலையில் இருப்பவர் வாய் உளறுவதைக் குறிக்கப் புசத்துதல் அல்லது பிசத்துதல் என்கிறார்கள். இறக்கும் தருணத்தை அடைந்தவர்கள் தமது இறுதி நேரத்தில் உளறலாகப் பல கதைகள் பேசுகின்றனர். மூளையின் கட்டுப்பாட்டை இழந்தவர்களாக அவர்கள் தொடர்பற்ற வார்த்தைகளைப் பேசுவது, முன்னுக்குப் பின் முரணானவற்றைப் பேசுவது, விநோதமாகப் பேசுவது, ஞாபகங்களில் நன்கு பதிந்துள்ளவற்றைப் பகிர்வதுபோலப் பேசுவது எனப் பலதையும் உடல் இயலாத - உயிர் பிரியவுள்ள தருணத்தில் உளறல்களாக வெளிப்படுத்துகிறார்கள். அதையே புசத்துதல் என்பர்.

இந்த நிலைக்கு அடுத்தது இறப்பு என்பதைச் சொல்லாமல் சொல்லும் வார்த்தையாகவும் இது இருக்கிறது. "ஆள் பிசத்தத் தொடங்கீற்றுது" என்றால் அந்த நபர் இறக்கப்போகிறார் என்று எதிர்வுகூறுவதுபோலாகிவிட்டது.

இதுதவிர போதை தலைக்கேறியவர் மூளைக் கட்டுப்பாட்டை இழந்து பேசுவதையும் புசத்துதல் என்கின்றனர். "அவன் வெறியில ஏதேதோ எல்லாம் புசத்துகிறான்" - என்கிற சொல்லாடல் இதற்கு உதாரணம்.



# கார்கி

## அழுத்தமான படம்



சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமை குறித்த புரிதலை ஏற்படுத்தக்கூடிய விறுவிறுப்பான திரைப்படம்தான் 'கார்கி'. அழுத்தமான திரைக்கதையால் தாக்கம் தரும் படைப்பு.

பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார் கார்கி (சாய்பல் லவி). அவரது அப்பா பிரம்மானந்தா (ஆர்.எஸ்.சிவாஜி), அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் காவலாளியாக பணிபுரிந்து வருகிறார். அந்த அடுக்குமாடி குடியிருப்பில் சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட, அதில் பிரம்மானந்தாவின் பெயரும் சேர்க்கப்படுகிறது.

தனது தந்தை குற்றவாளியில்லை என கூறி சட்டப் போராட்டத்தில் இறங்கும் மகள் கார்கி இறுதியில் வென்றாளா? உண்மையான குற்றவாளி யார் என்பதை சமரசமின்றி வலுவான திரைக்கையுடன் சொல்லும் படைப்புதான் 'கார்கி'.

சந்தேகமேயில்லாமல் சமகால சினிமாவின் மிகச் சிறந்த நடிகைக்கான இடத்தை ஆக்கிரமித்திருக்கிறார் சாய் பல்லவி. மென்சோகத்தை சுமந்தபடி, திக்குத்தெரியாத காட்டில் சிக்கித்தவிக்கும் மானைப்போல, தந்தையை மீட்க திசையறிமால் ஓடுகிறார். அவரைவிட அந்தக் கதாபாத்திரத்தை யாரும் சிறப்பாகச் செய்துவிட முடியாது எனச் சவால் விடும் அள விற்கு நடிப்பின் மூலம் நியாயம் சேர்த்திருக்கிறார்.

அடுத்தாக காளிவெங்கட்டை குறிப்பிட்டாகவேண்டும். சின்ன சின்ன கதாபாத்திரங்களில் நடித்து வந்தவருக்கு இந்தப் படத்தின் மூலமாக ஓர் அழுத்தமான பாத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. டைமிங்கில் கவுன்ட்டர் டையலாக் கொடுப்பது, பயத்துடன் வாதாடுவது, திக்கிப் பேசுவது, சாய் பல்லவியின் திட்டுகளை அப்பாவியான முகபாவனைகள் மூலம் சமாளிப்பது என நடிப்பில் நயம் சேர்க்கிறார்.

தவிர, ஜெயப்பிரகாஷ், சரவணன், ஐஸ்வர்ய லக்ஷ்மி, கவிதாலயா கிருஷ்ணன், லிவிங்க்ஸ்டன் உள்ளிட்ட கதாபாத்திரங்கள் ஏனோ தானோ என எழுதப்படாமல் தேவைக்கேற்ப எழுதப்பட்டுள்ளதால் அதையொட்டிய அவர்களின் நடிப்பும் கவனம் பெறுகிறது.

ஹரிஹரன் ராஜுவுடன் இணைந்து எழுதியும், படத்தை தனியாக இயக்கியும் இருக்கிறார் கௌதம் ராமசந்திரன். படம் தொடங்கியதிலிருந்து எந்த சமரசத்துக்குள்ளும் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல் நேரடியாகக் கதைக்குள் நுழையும் போக்கே படத்தின் சூட்டை பார்வையாளர்களுக்கு பரிமாறிவிடுகிறது. மகளாக சாய் பல்லவியின் போராட்டம் தொடங்கியதிலிருந்து கண்களை திரையிலிருந்து



விலக்க முடியாதபடி பார்த்துக் கொள்கிறது திரைக்கதை.

காதல் இருக்கிறது என்றபோதிலும், அது வந்து போகிறதே தவிர, அதற்காக காதல் பாடல்களை வைத்தோ, ஓவர் டோஸ் கொடுத்தோ பார்ப்பவர்களைச் சோதிக்கவில்லை. படம் நிறைய விஷயங்களை பேச முயற்சிக்கிறது.

குற்றவாளி என நீதிமன்றம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே ஒருவர் பொதுச் சமூகத்தால் குற்றவாளிக்குண்டில் நிறுப் படுகிறார். அப்படிப் பொதுச் சமூகம் தீர்மானிக்கும் ஒருவரின் குடும்பம் எப்படியெல்லாம் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்படும் என்பதை அண்மையில் வெளியான மாதவனின் 'ராக்கெட்ரி நம்பி விளைவு' படத்தில் பார்த்தோம். அதேபோன்றதொரு குடும்பத்தின் பாதிப்பை இந்தப் படமும் உணர்த்துகிறது.

இதுபோல பொது சமூகத்தால் ஒருவர் குற்றவாளியாக்கப்பட முக்கிய மூல காரணமாக ஊடகங்கள் இருப்பதை படம் தோலுரிக்கிறது. 'சொல்ல விரும்புறது நியூஸ் இல்ல.. நடந்தத சொல்றதுதான் நியூஸ்' என அழுத்தமான வசனங்கள் மூலம் பத்திரிகைத்துறையின் தற்போதைய நிலை குறித்து படம் பேசுகிறது.

நீதிபதியாக திருநங்கை நியமிக்கப்பட்டு, அதற்கான காரணமாக 'ஆணின் ஆணவமும் பெண்ணின் வலியும் எனக்குத் தெரியும், எனவே, இந்த வழக்கிற்கு தீர்ப்பு வழங்க நான்தான் சரியான நபர்'' என விளக்கும் காட்சி சிறப்பு.

படத்தின் மிகப் பெரிய பலம், நீண்ட வசனங்கள் மூலமாக காட்சிகளை கடத்தாமல், வசந்த் கோவிந்தாவின் வயலின் மூலம் காட்சிகளை கடத்தியிருப்பது. அது திரைமொழியின் ஆற்றலை கூட்டுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் முகத்தை காட்டாமல் வைத்திருந்தது, காவல் அதிகாரிக்கு பென்னிக்ஸ் ஜெயராஜ் எனப் பெயரிட்டிருப்பது, சாய் பல்லவியையும் ஒரு விக்டிமாக காட்டியிருந்த விதம், ஆழமான வசனங்கள், இலவச சட்ட ஆலோசனை மையம் பயனற்று இருப்பது, குற்றவாளி மீதான முன்முடிவுகள் என காட்சிக்கு காட்சி கவனிக்க வைத்திருக்கிறார் இயக்குநர்.

அதேநேரம், தன் கணவர் சிறையிலிருக்கும்போது மனைவி ஒருவர் எந்தவித பதற்றமும் இல்லாமல் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுவும் இரண்டு பெண் பிள்ளைகளின் தாயார் அப்படி இருக்கவும் முடியுமா இந்தச் சமூகத்தின் மத்தியில்? வழக்கறிஞரைத் திக்கிப் பேசுபவராக காட்சிப்படுத்தி, அதை ஒரு டெம்ப்ளேட்டாக மாற்றியிருப்பது அயற்சியைத் தருகிறது.

மொத்தத்தில் ஆழமான விஷயங்களை அழுத்தமான திரைக்கதையுடன் சொல்லியிருக்கும் விதத்தில் கண்டிப்பாக 'கார்கி' பட த்தை தவறாமல் பார்க்கலாம். இத்தகைய படங்கள் பெரும் செலவில் இன்னும் சிறப்பாக எடுக்கப்படவேண்டும். அதுவே இன்றைய சினிமாவின் தேவையாக இருக்கிறது.




# நதி

## காய்ந்துபோன நிலம் மட்டுமே

பேட்மிண்டன் போட்டியில் தேசிய அளவில் வெற்றிபெற்று அரசு வேலைக்கு சென்று குடும்பத்தை முன்னேற்றவேண்டும் என்ற கனவுடன் கல்லூரிக்குள் காலடி எடுத்து வைக்கிறார் நாயகன் சாம் ஜோன்ஸ். அரசியல் செல்வாக்குடன், சாதி வெறியையும் பற்றிக்கொண்டிருக்கும் குடும்பத்தில் பிறந்த நாயகி கயல் ஆனந்தியும் அதே கல்லூரியில் நுழைய, இருவரின் நட்புக்கும் காதலுக்குமிடையே உறவு ஊசலாடுகிறது.

இந்த உறவை காதல்தான் என தீர்மானிக்கும் சாதிய ஆதிக்க கூட்டத்தின் நடுவே சில அரசியல் தகிடு தத்தங்கள் நடக்க, இறுதியில் தன்னுடைய கனவை நாயகன் எட்டிப்பிடித்தானா? நாயகியின் காதல் கைகூடியதா? இருவரையும் சாதிய ஆதிக்கக் கூட்டம் என்ன செய்தது என்ற புள்ளிக்கு வளைந்து, நெளிந்து பார்வையாளர்களை அழைத்துச்செல்லும் படம்தான் 'நதி'.

படத்தை தயாரித்து, நடிக்கவும் செய்திருக்கிறார் நாயகன் சாம் ஜோன்ஸ். கதை கோரும் நாயகனுக்கான பிம்பத்திலிருந்து சாம் ஜோன்ஸ் விலகியிருக்கிறார். அதுவே படத்திற்கு பெரிய சிக்கலாகிவிடுகிறது. காரணம், அழுத்தமான அந்தக் கதாபாத்திரம் ஒரு நதியைப் போல தேவையான இடங்களில் ஆக்ரோஷத்தையும், சில இடங்களில் அமைதியையும், மற்ற இடங்களில் சலனத்தையும் வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், படம் முழுக்க வெளிப்படுத்தியிருக்கும் அவரது ஒரே மாதிரியான முகபாவனையும், நடிப்பும் படத்தை பார்வையாளர்களிடமிருந்து தள்ளி வைத்து விடுகிறது.

படத்தில் 'கயல்' ஆனந்தி மற்றும் முனீஸ்காந்தின் நடிப்பும் ஆறுதல். சாதி ரீதியான படங்கள் என்றாலே முதலில் வேல ராமமூர்த்தியையும், கரு.பழனியப்பனையும் புக் செய்து விடுகிறார்கள். கூடவே, ஏ.வெங்கடேசும் வந்துவிடுகிறார். சாதிய படங்களில் பார்த்து பார்த்து பழகிய இந்த முகங்களால் மீண்டும் அதே உணர்ச்சிகளையும், முறுக்கலையும் பார்ப்பது அயற்சி. அவரகள் நன்றாகவே நடிக்கிறார்கள் என்றாலும், நடிகர்கள் தேர்வில் மாற்றம் இருந்திருக்கலாம். தவிர, 'மைக்செட்' ஸ்ரீராம், கொடங்கி வடிவேலு, ராம்நிஷாந்த் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகளும், அதனை அவர்கள் பயன்படுத்திக்கொண்ட விதமும் வரவேற்க வேண்டியது.

படத்தை அறிமுக இயக்குநர் தாமரைச் செல்வன் இயக்கியிருக்கிறார். 'பொம்பள புள்ளைய உசுரே இல்லாத பொருளாதான் பாப்பீங்களா' - இந்த வசனம்தான் படத்தின் ஆதிக்கரு. முக்கியமான பேச வேண்டிய வசனமும்கூட. ஆனால், அதையொட்டிய ஓர் அழுத்தமான திரைக்கதையை கட்டியெழுப்பியிருந்தால் நதி, வெள்ளமாக உருப்பெற்று ரசிகர்களை அடித்துச்சென்றிருக்கும். சிக்கல் என்னவென்றால், படத்தின் முதல் பாதி முழுக்க நகைச்சுவை என்கிற பெயரில் பார்வையாளர்களைத் துன்பப்படுத்திவிட்டு நாயகன், நாயகி இடையே நட்பை மலர வைக்க இயக்குநர் போராடியிருக்கிறார்.

அதற்காக எழுதப்பட்ட காட்சிகளில் எந்த வலுவுமில்லை. கருத்தியலாகப் பார்த்தாலும், ஓரிடத்தில் மைக்

செட் ஸ்ரீராம் பிடிச்சிருக்கு என நாயகனை பார்த்து சொல்லும்போது, நாயகன், 'ச்சீ இங்கையும் வந்துட்டீங்களா?' என கேட்கும் காட்சிக்கும், வசனத்திற்குமான நோக்கம் என்ன? பார்வையாளர்களை சிரிக்க வைக்கவா? அல்லது வேற என்ன பொருளுக்காக அந்த இடத்தில் அந்தக் காட்சி வைக்கப்பட்டது எனத் தெரியவில்லை. தன் பால் ஈர்ப்பாளர்களுக்கு எதிரான பார்வை மழுங்கடிகப் பட்டு வரும் சூழலில் 'ச்சீ' என்பதற்கான அர்த்தம் என்ன?

எடுத்துக் கொண்ட கதையில் கவனம் செலுத்தியிருந்தாலும் கூட, சாதிய ஒடுக்கு முறைகளை அப்பட்டமாக பேசியிருக்கலாம். ஆனால், மேலோட்டமான காட்சிகளால் கருவின் ஆழத்தை தொட முடியாததும், முதல் பாதி முழுக்க கதை முழுக்க எந்த திசையுமில்லாமல் நதி பயணிப்பதும் சோதனை.

எளிதாக கணிக்கக்கூடிய காட்சிகளால், சுவாரஸ்யமில் லாத இரண்டாம் பாதியும் நம்மை நதியிலிருந்து காப்பாற்ற தவறுகிறது. அச்சாணியான நட்பு, காதல் காட்சிகள் அழுத் தமாக இல்லாததால், அதையொட்டி வெடிக்கும் பிரச்சினைகளும், அது ஏற்படுத்தும் பாதிப்புகளும், பார்வையாளர்களுக்குள் எந்த சலனத்தையும் ஏற்படுத்துவதில்லை.



## யாழ்ப்பாணத்தில்...

ருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் போராட்டக்காரர்களின் மீதான ரணில் - ராஜபக்சக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்போம் என்கிற தொணியில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக ஜேவிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஈபிஆர்எல்எவ் கட்சியிலிருந்து பிரிந்த தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக நண்பகல் ஒரு மணிக்குப் போராட்டம் நடத்தப்படும் என்று சந்திரசேகரன் தெரிவித்தார்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781